பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 03 வெள்ளிக்கிழமை 18.12.2020 கதிர் 43

இனி து ரகசியம் அல்ல!

வடக்கில் உள்ளூர் அரசியலில் இப்போது அதிகம் பேசப்படும் விவகாரம் யாழ் மாநகரசபை மேயர் பதவி பற்றியதுதான்.

மேயர் பதவியை இமானுவல் ஆனால்ட் இழந்தவராகிவிட்டார். புதிய மேயர் யார்? மீண்டும் பதவி பெற அவர் பக்கம்02

# மருதனார்மடம் கொத்தணி 73 ஆக உயர்வு!

## நேற்றும் 5 பேருக்குத் தொற்று உறுதி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

மருதனார்மடம் பொதுச் சந்தை கொரோனா வைரஸ் கொத்தணியில் நேற்றும் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 73 ஆக அதிகரித்துள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட சுன்னாகம் சந்தை வியாபாரிகள் 114 பேருக்கு நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பக்கம் 02

# ஜனாஸா எரிப்பு தொடர்ந்தால் முஸ்லிம்கள் ஆயுதம் தூக்குவர்

## நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை




யாழ்ப்பாணம், டிசெம்பர் 18

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்காவிட்டால் பாரிய பிரச்சினைகள் உருவெடுக்கும். அது முஸ்லிம் இளைஞர்களை ஆயுதமேந்தவும் வைத்துவிடலாம்.

– இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை விடுத்துள்ளார். 02

# கிறிஸ்துமஸ் ஆராதனைகளை 50 பேருடன் மட்டுப்படுத்துங்கள்

## மக்களிடம் பேராயர் கோரிக்கை



சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கிறிஸ்துமஸ் ஆராதனைகளை முன்னெடுக்குமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக கத்தோலிக்க மக்கள் தத் தமது வீடுகளில் இருந்து மிகவும் அர்த்தபூர்வமாக கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

எனினும், பக்கம் 02

# மானிப்பாயில் எட்டு மாத சிசு மூச்சுத் திணறலால் மரணம்!

## கொரொனாத் தொற்றுக் காரணமா?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.18

மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட 8 மாதக் குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்தது.

மானிப்பாய் பக்கம் 02

# பொய்யுரைத்த லொஹான் ரத்வத்த பதவியில் இருந்து விலக வேண்டும்

## சஜித் அணி வலியுறுத்து

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பொய்யுரைத்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பதவி விலக வேண்டும். பக்கம் 02

# அப்துல்லா மஹ்ரூப்புக்கு 30 வரை மீண்டும் மறியல்



முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்புக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சதொச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் திருகோணமலையில் பக்கம் 02

# வவுனியாவில் காணாமல்போனோர் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு நீதிமன்றம் கட்டளை

## கொரோனாவைக் காரணம் கூறுகின்றது

வவுனியாவில் காணாமல் போனோரின் உறவினர்களால் இன்று முன்னெடுக்கப்பட இருந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது. அத்துடன் காணாமல் போனோர் சங்கத்தின் தலைவியையும் நீதிமன்றில் ஆஜராகுமாறும் அது பணித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவிக்கு வவுனியா நீதிமன்ற நீதிவானால் வழங்கப்பட்டுள்ள கட்டளைப் பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா தலைமைப் பொலிஸ் பரிசோதகரினால் இந்த மன்றுக்கு தாக்கல் செய்த அறிக்கையின்படி நாளை (இன்று) காலை 10 மணிக்கு, வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு பக்கம் 02

# யாழ்.ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டாமல் அனுமதிகளுக்கு வராதீர் என ஆளுநர் கண்டிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.18

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறாமல் எந்தவொரு அனுமதிக்கும் என்னிடம் விண்ணப்பிக்க வேண்டாம் என மாகாண ஆளுநர், மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனிற்கு கண்டிப்பான உத்தரவை பக்கம் 02

# நேற்றும் 650 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்று மட்டும் 650 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போட்டியிடுவாரா? தமது வேட்பாளராக மீண்டும் அவரைக் கூட்டமைப்பு நிறுத்துமா? – இப்போது எழுப்பப்படும் கேள்விகள் இவைதான்.

இந்த விடயத்துக்குள் இறங்க முன்னர், இவ்விவகாரத்தை ஒட்டி ஓரிரு தினங்களுக்கு முன்னர் நான் இந்த விடயத்தில் குறிப்பிட்ட தவறு ஒன்றைத் திருத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஓர் உள்ளூராட்சி சபையின் முதல் இரண்டு வருட கால பதவி முடிந்த பின்னர் அதன் தலைவர் சமர்ப்பிக்கும் வரவு – செலவுத் திட்டம், சபையினால் இரண்டு தடவைகள் நிராகரிக்கப்படுமானால் அத் தலைவர் பதவியிழந்தவராவர் என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த முறைமையின் கீழ்தான் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்ப்பாண மேயர் ஆனால்ட்டும் பதவியிழந்தனர்.

ஆனால் அதன் பின்னர் நடைபெறக் கூடிய விடயமாக நான் குறிப்பிட்ட விவகாரம்தான் தவறானது. திரும்பவும் நடைபெறும் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படும் புதிய தலைவர் (அவர் பழையவராகவும் இருக்கக் கூடும்) சமர்ப்பிக்கும் வரவு – செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும், அடுத்த இரண்டு வருடங்களுக்கு அவர் நிர்வாகத்தைக் கொண்டு நடத்முடியும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அதுதான் தவறானது.

புதிய மேயருக்கான தெரிவில் ஆனால்ட் திரும்பவும் மேயரானால், அப்போதும் அவரின் வரவு – செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அவர் அப்படியே இரண்டு வருடங்களுக்குப் பதவியில் தொடரமுடியும் என்நான் தெரிவித்திருந்தேன். அப்படியல்ல.

நிலைமை அதனை விட விபரீதமானது. இப்படி ஒரு மேயர் அல்லது நகர சபைத் தலைவர் அல்லது பிரதேச சபைத் தவிசாளர், இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, அது தோற்கடிக்கப்பட்ட நிலையில் பதவி இழந்தால், அந்த இடத்துக்குத் தெரிவு செய்யப்படுபவர் மீண்டும் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். அதுவும் தோற்கடிக்கப்பட்டால் அந்தச் சபையே கலைந்துவிடும். அதுதான் சட்ட ஏற்பாடு.

அத்தகைய நிலையில் உள்ளூராடசி அமைச்சு அந்த சபைக்கு ஆணையாளரை அல்லது விசேட ஆணையாளரை அல்லது சபைச் செயலாளரை நியமித்து சபையைக் கொண்டு நடத்தும். இது தான் நிலைமை.

யாழ் மாநகர சபைக்கு ஆனால்ட்டோ, வேறு யாரோ மேயராக வந்தாலும், குறுகிய காலத்தில் சபைக்கு அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அது நிராகரிக்கப்பட்டால் – சபையால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் – மாநகரசபையே கலைத்து விடும். சபையின் நிர்வாகம் நேரடியாக விசேட ஆணையாளரின் கீழ் வந்துவிடும்.

இந்தப் பின்புலத்தில்தான் புது மேயர் தெரிவைகட்சிகள் அணுகவேண்டியிருக்கும்.

இப்போது இரண்டு தடவைகள் மேயர் ஆனால்ட்டின் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இது கூட்டமைப்புக்கான எதிர்ப்பல்ல. மேயர் ஆர்னால்டை இலக்கு வைத்து சைக்கிள் கட்சியும், வீணைக. கட்சியும் நடத்திய தாக்குதல்.

ஆகவே மீண்டும் ஆனால்ட் மேயராகத் தெரிவு செய்யப்பட்டாலும் இதுதான் நடக்கும், அப்படி நடந்தால் சபை நிர்வாகத்தை அரசிடம் கையளிக்கும் தேவையற்ற விடயமே ஒப்பேறும் என்று சில தரப்புகள் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டுகின்றன.

ஆனால்ட்டுக்கு மாற்றாக சொலமன் சிறிலையோ அல்லது மற்றைய தரப்புகளுக்கு ஏற்புடைய தெரிவையோ கூட்டமைப்பு நிறுத்துமானால், அவரை மேயராக வெற்றி பெற வைப்பதிலும், அவரின் வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப் படுவதிலும் எதிர்ப்புக் காட்டாமல் இருக்க வீணைக் கட்சியும் – சில சமயங்களில் சைக்கிள் கட்சியும் கூட – இணங்கும் எனத் தெரிகின்றது.

ஆனால்ட்டுக்கு மாற்றாக சைக்கிள் கட்சியின் அதிருப்திக் குழுப் பிரமுகரான சட்டத்தரணி வீ.மணிவண்ணனை மேயராகக் களமிறக்குவது குறித்து பேசப்பட்டாலும் அதுவும் பல குழப்பங்களுக்கும், மோதல்களுக்கும் வழி வகுக்கும் என்பதால் அதற்கான சாத்தியங்கள் குறைவு என்றே தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும், ஒரு விடயம் தெளிவு. ஆனால்ட்டையே மீண்டும் மேயர் வேட்பாளராகக் களமிறக்கினால் – தமிழரசின் சில மூத்ததலைவர்களின் விருப்பம் அதுவாக இருந்தாலும் – ஒன்றில் கூட்டமைப்பு மேயர் பதவியை பறிகொடுக்கும். அல்லது சபையே விரைந்து கலையும். இதுதான் இன்றைய களநிலைவரம்.

கூட்டமைப்பு யானைபோல தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுமா? தெரியவில்லை. பார்ப்போம்.

★ ★ ★

மன்னார் பிரதேச சபையில் ரிஷாத் பதியுதீனின் கட்சி நிர்வாகத்தை வீழ்த்தி, தவிசாளர் பதவியைக் கூட்டமைப்புக் கைப்பற்றுவதற்கு இருந்த அருமையான வாய்ப்பு அடிபட்டுப் போய்விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் ஒருவர், ரிஷாத் கட்சியினரை ஆதரித்து, வரவு – செலவு திட்டத்துக்கு சார்பாக வாக்களித் தமையாலும் –

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ உறுப்பினர் ஒருவர் இறுதி நேரத்தில் ஓடி ஒளிந்து விட்டதாலும் –

மன்னார் பிரதேச சபையை ரிஷாத்தின் கட்சி 10 – 09 என்ற அடிப்படையில் காப்பாற்றிக் கொண்டு விட்டது.

மன்னார் பிரதேச சபை நிர்வாகத்தைக் கூட்டமைப்பின் கைக்கு மாற்றக் கிடைத்த அருமையான வாய்ப்புத் தப்பிப் போனதில் கூட்டமைப்பின் – தமிழரசின் – வன்னி மாவட்ட எம்.பியான சாள்ஸ் நிமலநாதனுக்குக் கோபமோ கோபம். தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்து வாங்கித் தள்ளினார் அவர் என்று கேள்வி.

தன்னுடைய தமிழரசையும் கூட்டமைப்பையும் வழிப்படுத்தி வைக்க முடியாத மாவை பத்துக் கட்சிக் கூட்டணி என்று புருடா விடத் தொடங்கியிருப்பது அவர் கட்சிக்குள்ளும் குழப்பங்களை ஏற்படுத்தவே செய்துள்ளது.

யாழ்.மாநகரசபை விவகாரத்தில் தாங்கள் சம்பந்தப்படுவதேயில்லை – தள்ளி நின்று பார்ப்பது – என்ற நிலைப்பாட்டில் சுமந்திரனும், சிறிதரனும் இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது.

மாவையர் எப்படிக் கையாண்டு போட்டடிக்கப்போகின்றார் என்பதை சரித்திரம் நாளை பதிவு செய்யும். பார்த்திருப்போம்.

★ ★ ★

அரசாங்கத் தரப்புப் பிரமுகரகளின் ஆதரவு நிலைமை எத்தகையது என்பதற்கு ஒரு 'ஸாம்பிள்' நேற்றைய சம்பவம்.

அரசுக்குள் இடதுசாரிப் போக்காளர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. ஒரு காலத்தில் 'பயர் பிறாண்ட்' அரசியல்வாதி. தெற்கில் ஒரு கலக்குக் கலக்கியவர்.

அவரது சொந்தத் தொகுதி எகலியகொட. அங்கு ஓர் அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைக்க அவர் சென்றிருந்தார். மக்கள் கூக்காட்டி, சத்தமிட்டு, குழப்பம் பண்ணி நிகழ்ச்சியை நடத்த விடாமல் அவரைத் திருப்பி அனுப்பச் செய்து விட்டார்கள்.

மொட்டின் ஆதரவு நிலைமை தெற்கில் மெல்லச் சறுகத் தொடங்குகின்றது என்றே தோன்றுகின்றது.

– மின்னல் –

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பகுதியைச் சேர்ந்த ஆண் குழந்தை ஒன்றே நேற்றுக் காலை மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் பெற்றோரால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

எனினும் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் குழந்தை சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தது. இருந்த போதும் மரணத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதன் காரணமாக உயிரிழந்த குழந்தையின் சடலம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முடிவு இன்னும் தெரியவரவில்லை.

## பொய்யுரைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மஹர சிறைச்சாலை மோதலில் கொல்லப்பட்ட கைதிகளில் நால்வர் துப்பாக்கிச்சூட்டில்தான் உயிரிழந்தனர் என விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மேற்கோள்காட்டி ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால், துப்பாக்கிச் சூட்டில் எவரும் பலியாகவில்லை, கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலால்தான் உயிரிழப்புகள் ஏற்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நாடாளுமன்றத்தில் அண்மையில் அறிவித்திருந்தார்.

விசாரணை முடிவதற்கு முன்னரே தவறாகத் தகவலை வெளியிட்டு நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் முற்பட்டுள்ளார்.

அமைச்சுக்கான உத்தியோகபூர்வ அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி மக்களுக்குப் போலியான தகவலை அவர் வழங்கியுள்ளார்.

எந்த அடிப்படையில் தகவல் வெளியிட்டுள்ளார் என்பதே லொஹான் ரத்வத்த தெளிவுபடுத்த வேண்டும். அதேபோல் அவர் பதவி விலகவும் வேண்டும்.

தவறிழைத்து விட்டு அதை மறைப்பதற்காகப் பொய்யுரைக்கும் அரசுதான் இது என்பது மஹர சிறைச்சாலை சம்பவத்தின் ஊடாக மீண்டும் உறுதியானது – என்றார்.

## கிறிஸ்துமஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தனிமைப் படுத்தப்படாத பிரதேசங்களிலுள்ள தேவாலயங்களில் 50 பேருக்குக் குறையாக எண்ணிக்கையைக் கொண்டவர்களுடன் நத்தார் ஆராதனையை நடத்த முடியும் என்றும் பேராயர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் கிறிஸ்துமஸ் நள்ளிரவு ஆராதனையை, 24 ஆம் திகதி 6 மணி முதல் ஒவ்வொரு மணித்தியாலத்தின் அடிப்படையில் சிறிய குழுக்களைக் கொண்டு நடத்துமாறும் அறுவுறுத்தப்பட்டுள்ளது என்றும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான நத்தார் ஆராதனை கிறிஸ்துமஸ் தினத்தில் தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பாகும் என்றும், அதன் ஊடாக கத்தோலிக்க மக்கள் கிறிஸ்மஸ் ஆராதனையை வீட்டில் இருந்து மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## நேற்றும் 650...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

35 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று 701 பேர் வீடுகளுக்குத் திரும்பிய நிலையில் இதுவரை 26 ஆயிரத்து 353 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இன்னும் 8 ஆயிரத்து 874 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அப்துல்லா மஹ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு அழைத்து வரப்பட்ட அவர் நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியல் உத்தரவைப் பெற்றிருந்தார்.

இந்தநிலையில் நேற்று மீண்டும் நீதிமன்றில் இணையவழி ஊடாக விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 30ஆம் திகதி விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு அளிக்கப்பட்டது.

## யாழ்.ஒருங்கிணைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம் பெறுகின்ற போதும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இதுவரை இடம்பெறவில்லை. இருந்தபோதும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் என்ற முறையில் அனுமதிக்கு பல விடயங்கள் ஆளுநருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனை அவதானித்த ஆளுநர் மேற்படி உத்தரவை வழங்கியுள்ளார்.

ஆளுநரின் இந்த உத்தரவினால் உடனடியாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கான திகதியைக் கோரி நேற்றைய தினமே ஆளுநருக்கு யாழ் மாவட்டச் செயலகத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதே நேரம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம் பெறாதமைக்கு மாவட்டச் செயலாளர் காரணம் அல்லர், அரசியல் அதிகாரப் போட்டியினால் போடப்பட்ட தடையே அதற்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

## ஜனாஸா எரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவில் புதைக்க முடியும் என்றால், அவற்றை ஏன் இலங்கையில் புதைக்க முடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்வதன் ஊடாகத் தொற்று பரவாது என்பதை தொற்று நோய் மற்றும் வைரஸ் குறித்த பிரபல்யம் வாய்ந்த பேராசிரியர் மலித் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக வலைத்தளமொன்றில் இயங்கி வரும் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்தக் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இலங்கையில் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், அவை முஸ்லிம் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க உரிய முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் இதன் போது அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மருதனார்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை வெளியான முடிவுகளின்படி இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் உடுவில் பகுதியையும், மற்றையவர் மானிப்பாய் பகுதியையும் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 418 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. நேற்றிரவு வெளியான முடிவுகளின்படி 3 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூவரும் இணுவில், மானிப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அதன்மூலம் மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணியால் கடந்த 7 நாள்களில் 73 பேர் பாதிக்கபட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அருகில் காணாமல்போனவர்களின் உறவினர்களால் நடத்தப்படும் உண்ணாவிரதப் போராட்டம் 1400 நாள்களைக் கடந்துள்ளமையால் இதுவரையும் இந்தக் குடும்பத்தினருக்கு தீர்வு கிடைக்காதமை சம்பந்தமாக, அன்றைய தினம் பதாகைகளைக் காட்சிக்கு வைத்து ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக தற்போது பரவி வரும் கொரோனா நோய் மேலும் பரவுவதற்கும் மற்றும் மக்களின் சுகாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கு இடமுள்ளமையாலும், தனிமைப்படுத்தல் விதிமுறை இல்லாமல் போகும் என்பதாலும், இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த இருக்கும் இந்த ஆர்ப்பாட்டக் குழுவின் தலைவியாகிய வவுனியா, தேக்கவத்தை என்னும் விலாசத்தில் வசிக்கும் காசிப்பிள்ளை ஜெயவனிதா என்பவருக்கு குற்றவியல் நடவடிக்கை முறை சட்டகோவையின், சட்டம் 106(1) பிரிவின் கீழ், இந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இது சம்பந்தமாக அறிந்துகொள்வதற்காக வவுனியா, தேக்கவத்தை என்னும் விலாசத்தில் வசிக்கும் காசிப்பிள்ளை ஜெயவனிதா ஆகிய உம்மை 2021.01.04 திகதி அன்று காலை 09.30 மணிக்கு இந்த மன்றுக்கு முன்னிலைப்படுமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன் – என்றுள்ளது.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன 95 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு!

## மலர் பிரதமரிடம் கையளிப்பு





இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 95ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட ‘தேசிய ஒலிபரப்பாளர்’ நூல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கடந்த புதன்கிழமை காலை விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு புதன்கிழமையுடன்; 95 ஆண்டுகள் நிறைவடைகின்றன. தேசத்தின் ஒலிபரப்பாளராக ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் இதுவரை மக்களுக்கு இணையற்ற சேவையை வழங்கியுள்ளது. பல தசாப்த காலங்களாக ஊடகத்துறையில் முன்னணி ஒலிபரப்பாளராக தேசிய வானொலி விளங்கி வருகின்றது.

95ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் தேசிய வானொலி, வணிக சக்திகளுக்கு அடிபணியாமல் தங்கள் தேசிய பணியை நிறைவேற்றி வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். எனவே, 95 ஆண்டுகளாக தேசிய வானொலி வழங்கிய தேசிய சேவையை இந்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். 95 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட சகாப்தத்தை குறிக்கும் 95 பாடல்கள் அடங்கிய அல்பம் மற்றும் பேராதெனிய தாவரவியல் பூங்காவின் ஓர்க்கிட் பிரிவு வானொலியின் 95 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட டென்றோ பியம் றேடியோ சிலோன் என்ற கலப்பின ஓர்க்கிட் மல ரும் இதன்போது பிரதமருக்கு வழங்கப்பட்டது.

1925 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி, பிரித்தானிய ஆளுநர் ஹியூ கிளிஃபர்ட்டின் தலைமையில் இலங்கையின் வானொலி சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது தொலைத்தொடர்பு துறையின் கீழ் இருந்தது. 1949 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம்; திகதி இந்த வானொலி சேவை றேடியோ சிலோன் என்ற பெயரில் புதிய துறை யாக மறுசீரமைக்கப்பட்டது. அதன் முதலாவது பணிப் பாளர் ஜோன் ஏ. லம்சான் ஆவார். 1967 ஜனவரி 5 ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புத் துறை, கூட்டுத்தாபன மாக மீண்டும் மறுசீரமைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் விக்ரமசிங்க மற்றும் பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளத்தில் வீழ்ந்தது ஜீப் வைத்தியர் ஒருவர் காயம்!



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை நகரததுக்கு அண்மித்த பகுதியில் ஜீப் வண்டி ஒன்று கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் 35 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத விபத்தில் சாரதி காயங்களுக்குள்ளாகி வட்டவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஜீப் வண்டி அக்கரப்பத்தனை பகுதியிலிருந்து கொழும்பு பகுதியை நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது வட்டவளை பகுதியில் வைத்து வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு பள்ளத்தில் பாய்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஜீப் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த ஜீப்பைச் செலுத்தியவர் அக்கரப்பத்தனை பிரதே சத்தை சேர்ந்த வைத்தியர் ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றிய பெண்ணுக்கு தொற்று!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டுவரும் பெண் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிலாபம் – ஆராச்சிகட்டுவ பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவரே கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர், மேலதிக சிகிச்சைக்காக வத்துபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அந்தப் பெண்ணுடன் பணியாற்றிய மேலும் 10 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நேற்று (வியாழக்கிழமை) மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அந்தப் பெண்ணுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய ஏனையவர்களைக் கண்டறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் தொற்றாளர் 15 ஆயிரம் தாண்டியது!

கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின்போது கொழும்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக கொவிட் – 19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த புதன்கிழமை கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 616 பேரில் 266 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து தற்போது வரை கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 123 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பைத் தவிர்த்து; கண்டி மாவட்டத்தில் 99 பேர், கம்பஹா மாவட்டத்தில் 94 பேர், களுத்துறை மாவட்டத்தில் 48 பேர், இரத்தினபுரி மாவட்டத்தில் 31 பேர் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 24 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 பேர், மாத்தறை மாவட்டத்தில் 8 பேர், கேகாலை மாவட்டத்தில் 8 பேர், புத்தளம் மாவட்டத்தில் 4 பேர், குருணாகல் மாவட்டத்தில் 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், காலி மாவட்டத்தில் 3 பேர், நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 5 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 737 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 25 ஆயிரத்து 652 நோயாளர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 925 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 07 . 07 . 1929



இறப்பு 17 . 12 . 2020

அமரர்

**கார்த்திகேசு நடராஜா**

(ஓய்வுபெற்ற அதிபர், காரைநகர் K.K. நடராஜா மாஸ்டர்)

காரைநகர் தந்த கல்வியாளனே
கணிதத் துறையின் புலமையாளனே
சீரான கல்விப் புலத்தில் தடம் பதித்தோனே
சிறந்த நல் வைத்தியரையும் கல்வியாளர்களையும் தந்தவரே
பேராண்மையுடன் பிறந்த மண்ணுக்கு உழைத்தவரே
பிரிவறிந்து ஆறாத்துயருடன் அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
மணி ஐயப்பா நகைப் பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக,
A9 வீதி, கிளிநொச்சி.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தூங்கும் நீதி...!

**ஓர் அரசு என்ற முறையில் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்புக்கு பாரதீனப்படுத்த முடியாத சில பொறுப்புகள், கடமைகள் உள்ளன. தன்னுடைய பிரஜைகள் தொடர்பில் அதன் கடப்பாடு அளப்பரியது.**

**அந்த வகையில் ஒன்றுதான் நீதித்துறை காவல்பற்றிய கடப்பாடும் கூட.**

**சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர், அதனடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்படுவோர், நீதிமன்றத் தீர்ப்புகள், உத்தரவுகளின் பேரில் தடுத்து வைக்கப்படுவோர், சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிப்போர் இன்னோரன்ன பிரிவினரும் இந்த நாட்டின் பிரஜைகளே. மனிதர்களாக வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் யாவும் அவர்களுக்கு முண்டு. நீதிமன்றத்தின் மரண தண்டனைத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் தீர்மானம் சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டு அத்தண்டனை நிறைவேற்றப்பட்டாலே ஒழிய, ஒவ்வொரு கைதிக்கும் வாழ்க்கைக் குரிய சாதாரண அடிப்படை உரிமைகள் உண்டு. சிறையில், தடுப்புக் காவலில், விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுவதனால் சட்ட ரீதியாகப் பறிக்கப்படும் சுதந்திரம் தவிர்ந்த பிற உரிமைகள் அவர்களுக்குமுண்டு.**

**சட்டத்தின் கீழ் – நீதி ஒழுங்குகளின்படி – அவர்களின் நடமாடும் சுதந்திரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, தனது நீதி முறைமைகளின் கீழ் தடுத்து வைக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கும் அரசு, அதன் மூலம் அவர்களின் பிற உரிமைகளை உறுதிப்படுத்தும் கடப்பாட்டை – பொறுப்பை – தானே ஏற்றுக் கொள்கின்றது. அரசைப் பொறுத்தவரை அது உதறித் தள்ளிவிட முடியாத – பிற தரப்புகள் மீது சுமத்தி விட முடியாத – கட்டாய பொறுப்பு இது.**

**ஆனால், இலங்கையில் இதுவரை காலமும் இருந்து வந்த அரசுகள் இது பற்றி சிந்தித்தனவா – பொறுப்பை உணர்ந்தனவா – தெரியவில்லை.**

**இது வெறுமனே அரசுக்கு, அரசுத் தலைமைக்கு, நீதி, சட்டம், ஒழுங்கு தொடர்பான அமைச்சருக்குப் பொறுப்பான விடயம் மட்டுமல்ல.**

**கைதிகளின் பாதுகாப்புப் பற்றிய தார்மீகப் பொறுப்பு சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள், சிறை நிர்வாகத்தினர் போன்றோருடன் மட்டுப்படுத்தப்பட்டு விடும் கடப்பாடும் கூட அல்ல.**

**அதையும் தாண்டி, அக்கைதிகளின் தடுப்புக்காவல், சிறை, விளக்கமறியல் உத்தரவுகளை – கட்டளைகளை – தீர்ப்புக்களை – விடுக்கும் கீழ் நிலை நீதிமன்றங்களில் இருந்து இலங்கை யின் உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்றம் வரை அனைத்துக் கட்டமைப்புகளுக்கும் இந்தத் தார்மீகப் பொறுப்பு உண்டு.**

**அதாவது கீழ் நிலை நீதிமன்றங்களின் நீதிவான்களில் இருந்து, உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் உட்பட்ட நீதியரசர்கள் வரை–**

**சாதாரண அரச சட்டத்தரணியிலிருந்து சட்டமா அதிபர் வரை –**

**கைதிகளின் விடயத்தில் கடப்பாடும், பொறுப்பும் உடையவர்கள். அதுதான் நீதித்துறைத் தத்துவம்.**

**சிறை வைக்கப்பட்டிருப்பவர்கள் வேலியே பயிரை மேய்வது போன்ற கொடூரச் செயல்களால் பாதிக்கப்படும் போது அது தொடர்பான குற்றச்சாட்டு விரல்கள் வெறுமனே அரசுத் தலைவர், பிரதமர், சிறைத்துறை அமைச்சர், பொலிஸ் பேச்சாளர், அரசுத் தரப்பினர் மீதான அரசியல் வசைபாடலுடன் அடங்கி விடுகின்றதே தவிர, அதையும் தாண்டி இவ்விடயத்தில் பிற தரப்புகளுக்கும் பொறுப்பு இருப்பதாகக் கூட சுட்டிக்காட்டப்படுவதில்லை. உணர்த்தப்படுவதில்லை.**

**இத்தகைய சம்பவங்கள் இந்தியாவில் நடைபெறுமானால் அந்த நாட்டின் மிக உயர்ந்த நீதியமைப்பான உச்ச நீதிமன்றமே இது போன்றவற்றை பொதுநலன் விவகாரமாக் கையில் எடுத்துத் தானாகவே விசாரிக்கத் தொடங்கி விடும்.**

**ஆனால், இலங்கையில் 1983 ஜூலை வெலிக்கடைப் படுகொலைகளில் தொடங்கி, அண்மையில் மஹர சிறைவரை பல கொடூரங்கள் – வேலியே பயிரை மேயும் கதையாக – அரங்கேறி விட்டன. இனியும் கூட அவை தொடரலாம். ஆனால் அவை தொடர்பில் நமது நீதித்துறைக் கட்டமைப்புகளுக்கு உணர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.**

**இப்போதும் கூட இலங்கையில் சுமார் முப்பதாயிரம் சிறைக் கைதிகளில் மூவாயிரத்துக்கு அதிகமானோருக்கு கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டு விட்டது. மாற்று ஏற்பாடுகள் செய்யாமல் அவர்களைத் தொடர்ந்து நெருக்கமான சிறைக் கூடாரங்களுக்குள் தடுத்து வைத்தபடி தத்துவம் பேசிக் கொண்டிருக்கின்றன அரசுத் கட்டமைப்பும் நமது நீதி, சட்டத்துறையும்.**

***“கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி கூறினோம். ஆனால் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.”* – என்று பொலிஸ் மா அதிபர் மீது குற்றம் சுமத்துகின்றார் சட்டமா அதிபர்.**

**அப்படியானால், பொலிஸாரின் – பொலிஸ் மா அதிபரின் – விட்டேத்தியான போக்கும் சிறைக்கொத்தணி பெருகக் காரணம் என்றாகின்றது.**

**ஆனால், யார் மீதும் இது விடயத்தில் சட்டம், நீதித்துறை பாயாது. ஏனெனில் தன் பொறுப்பு – கடமை – உணராத சட்ட, நீதித்துறை தூங்குகின்றது போலும்...!**

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது அரசாங்கத்திடம் இராதாகிருஷ்ணன் கேள்வி!



‘இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லையெனில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது’ என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

‘இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை. அவ்வாறு இருந்தால் ஒருவரின் பெயரையாவது, அவ்வாறு கூறுபவர்கள் வெளியிடவேண்டும்’ என உதயகம்மன்பில அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் நுவரெலியாவில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே வே.இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விவரங்களை பல தடவைகள் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். நாமும் அது பற்றிக் கதைத்துள்ளோம். நல்லாட்சியின்போது தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அப்படியானால் இருந்த கைதிகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றனரா அல்லது இல்லாமல் செய்யப்பட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

அதேவேளை, மாகாணசபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அந்தத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி தனித்து போட்டியிடவேண்டும் என்பதே பங்காளிக்கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது பற்றி கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

மாகாணசபை முறைமை தொடரவேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை இரத்து செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கி விடும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எம்.சி.சி. கொடுப்பனவுகள் இரத்தாகினாலும் உதவிகள் தொடரும் என்கிறது அமெரிக்கா!

இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்துவது என எம்.சி.சியின் பணிப்பாளர் குழு தீர்மானித்துள்ள போதிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எம்.சி.சி. ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 48 கோடி அமெரிக்க டொலர் கொடுப்பனவை இரத்துச் செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அதன்படி இந்த ஒப்பந்தத்தின் கீழ் பயன்பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இலங்கையின் நட்பு நாடாக தொடர்ந்தும் காணப்படும் என தெரிவித்துள்ள தூதரகம், இலங்கை கொரோனாவை எதிர்கொள்வதற்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

# தபாற்சேவை ஊடாகப் பொதிகள் விநியோகிக்க புதிய செயற்றிட்டம்

பொதிகள் மற்றும் பொருள்களை வீடுகளுக்கே விநியோகிக்கும் புதிய செயற்றிட்டமொன்று தபால் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதி தபால்மா அதிபர் ராஜித்த ரணசிங்க தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொருள்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பணத்தைச் செலுத்தும் வகையில் இந்தச் சேவையை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கணினி மயப்படுத்தப்பட்ட தபால் அலுவலகங்கள் ஊடாக இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனூடாக சந்தைகளுக்குச் செல்வதைத் தவிர்த்து தமக்குத் தேவையான பொருள்களை மக்கள் வீடுகளிலிருந்தே பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

குறித்த செயற்றிட்டத்தின் முதற்கட்டத்தில் 50 ஆயிரம் ரூபா வரையான பெறுதியுடைய பொருள்களை வீடுகளில் பெற்றுக்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆரம்பத்தில் பணக்கொடுக்கல் வாங்கல் மாத்திரமே முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் கடன் அட்டைகளுக்கும் பொருள்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 42 இலங்கையர் நாடு வந்தடைவு!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 42 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, கட்டாரிலிருந்து 42 பேர் நேற்று (வியாழக்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

# உயர் அதிகாரிகள் எவருக்கும் வவுனியாவில் தொற்று இல்லை!

வவுனியாவின் உயரதிகாரிகளுக்கு அவசரமான முறையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவு நேற்று (வியாழக்கிழமை) வெளியாகியுள்ளது.

அதன்படி குறித்த அதிகாரிகள் எவருக்கும் தொற்று இல்லை என்று சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டவாதி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

அந்த சட்டவாதி பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார்.

இதனையடுத்து வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டன.

அந்த முடிவுகள் இன்றையதினம் வெளியிடப்பட்டிருந்தன. அதன்படி அதிகாரிகளில் எவருக்கும் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டது.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு!

## பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு

வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் மேம்படுத்துவதில் நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளமையால் இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் அதற்காக ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் வட.மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் கடந்த (புதன் கிழமை) இடம்பெற்ற 'கிராமத்துடன் கலந்துரையாடல் ஊடாக வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்துக்கு' தேசிய வேலைத்திட்டத்தின் வட.மத்திய மாகாண குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பஸில் ராஜபக்ஷ –

எதிர்வரும் 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கள் அனைத்தையும் கூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்த குழுக்கள் அழைக்கப்பட்டு ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு குறைந்தபட்சம் ஒரு 'கிராமத்துடன் கலந்துரையாடல்' வேலைத்திட்டத்தை நடத்தி கிராம மட்டத்தில் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தை செயற்படுத்தும்போது பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்புண்டு.

டிஜிட்டல் இலங்கையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அவர்கள் முயற்சிக்



கின்றார். இதற்கமைய இலங்கையிலுள்ள அனைவருக்கும் தங்களது வீடுகளிலிருந்து தேவையான தகவல் தொடர்பு சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

இம்முறையும் ஒரு லட்சம் கிலோமீற்றர் தூரம்வரை அபிவிருத்தி செய்து வருகிறோம். அதேபோன்று 'அனைவருக்கும் நீர்' திட்டத்தினூடாக நாட்டின் அனைத்து மக்களதும் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வோம்.

இவை அனைத்து நடவடிக்கைகளின் போதும் சுற்றாடல் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துகின்றோம். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கும் போது நகர்ப்புற காடுகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வனவிலங்குகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் பாரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் பெண் தொழில்முனைவோர்களை உருவாக்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கும் வகையில் 5 ஆயிரம் மின்மாற்றிகளுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய சூரிய சக்தியை வழங்க மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலவச உரம் மற்றும் நீர் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பாரிய தொகையை விவசாயிகளுக்காக ஒதுக்கியுள்ளது.

அவ்வாறு செய்து, விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கிறது.

எனினும், இதற்குச் சமமான வகையில் நுகர்வோருக்கும் அந்த நிவாரணம் கிடைக்குமா என்பது சந்தேகம். அரசிடம் நிலையான நெல் இருப்பு இல்லாமை இதற்குக் காரணமாகும். அடுத்த போகம் முதல் அனைத்து விவசாயிகளிடமிருந்தும் 8 முதல் 10 வீத நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

கிராம மட்டத்தில் களஞ்சியங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு கூட்டுறவு மற்றும் விவசாயிகள் சங்கங்களுக்கு பொருத்தமான களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறான களஞ்சியசாலைகளுக்காக இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்வனவுக்கு அவசியமான நிதியும் அரசாங்கத்தால் இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக சமுர்த்தி மற்றும் கூட்டுறவுக்;கும் இணைந்து கொள்ளலாம். இன்று ஏராளமான கூட்டுறவு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை முறையாக விநியோகிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அரசு போதுமான உரத்தை இறக்குமதி செய்துள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் உரம் கிடைக்காவிடின் உரிய பயனைப் பெற முடியாது. உரத்துக்காகவே ஓர் இராஜாங்க அமைச்சர் இருக்கிறார். ஓர் உர பணியகம் உள்ளது. உரங்களை இறக்குமதி செய்வதற்கு அதிக பணம் ஒதுக்கப்படுகிறது. உரமானது துறைமுகத்திலிருந்து நேரடியாக இந்த மாகாணத்துக்கு அனுப்பப்படுகிறது. சமூக அமைப்புகளின் ஊடாக கிராம நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை கிராம அபிவிருத்தி சங்கங்களின் நிதி வரம்பை அதிகப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன், காணி எல்லை நிர்ணயம் தொடர்பாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. காணி எல்லைகளை மாற்றுவதற்கு எவருக்கும் அதிகாரமளிக்கப்படவில்லை. நாட்டில் காணப்படும் ஒரு முக்கியமான பிரச்சினையான வட,மத்திய மாகாண மக்களுக்காக இதுவரை செயற்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களிலிருந்தும் நல்ல பலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. –என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீனவர் விவகாரத்தில் இந்தியத் தரப்பே நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி விவகாரத்தில் இந்தியத் தரப்பினரே நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

வவுனியாவில் கடந்த (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுக்கான நல்லெண்ண சமிக்கையாக கைது செய்யப்பட்டிருக்கின்றவர்களை விடுதலை செய்யுமாறு இந்திய தரப்பு கோரியுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இந்தியத் தரப்பினரே எல்லை தாண்டும் செயற்பாடுகளை நிறுத்தி தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், தடைசெய்யப்பட்ட தொழில் முறையை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் கடல் வளம் பாதிக்கப்பட்டு எதிர்கால இலங்கை – இந்திய சந்ததியினருக்கு வாழ்வாதரப் பிரச்சினை ஏற்படாமல் கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் இலங்கை கடற்றொழிலாளர்களும் பொறுமை இழந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தனர்..

இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு!



மட்டக்களப்பு, போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோவில் போரதீவு கிராமத்தில் மூன்று கிராம உத்தியோகஸ்தர் பிரிவிலும், நேற்று (வியாழக்கிழமை) டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்கீழ் பிரதேசத்தில் டெங்கு நோய் பரவக்கூடிய கிராமங்களை இனங்கண்டு வெல்லாவெளி பொது சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ராஜேந்ரன், ஆலோசனைக்கு அமைய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

வெல்லாவெளி பொதுச்சுகாதார அலுவலகத்துக்குட்பட்ட பரிசோதகர்களான கு.குபேரன், பி.ஜதுசன், பி.இராஜேஸ்வரன், எஸ்.ரவிகரன், ரிசிகோபன் ஆகிய பொது சுகாதார பரிசோதகர்களின் வழிநடத்தலில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம மட்ட டெங்கு குழுவினர், சமூக சுகாதார பயிற்சி உதவியாளர்கள், பிரதேச சபை ஊழியர்கள் இணைந்து பொது இடங்கள், பாடசாலை, வீடுகள் போன்றவற்றை பரிசோதனை செய்தனர்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

வேலைக்கு ஆள் தேவை

பிரபல கம்பனி உற்பத்தி
விற்பனையாள் தேவை.
சம்பளம் நேரடியாக பேசி
தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு
0769903620
0769903611

# வடக்கு மாகாணத்தில் நிர்வாகக் குளறுபடிகள்!

ந.லோகதயாளன்

இலங்கையின் நிர்வாகத்தில் அதிக அரசியல்தலையீடு, மோசடிகள், அசண்டையீனம், பொறுப்பின்மை காணப்படும் மாகாணமாக இருப்பது வடக்கு எனக் கணிக்கப்படுகின்றது என்பதைக் கவலையுடன் பதிவு செய்ய வேண்டிய அவல நிலைமை உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மத்திய அமைச்சிற்கு உட்பட்ட அரச அலுவலகமானாலும், மாகாண சபைக்கு உட்பட்ட அலுவலகமானாலும் இதுதான் நிலமை எனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இது மாவட்டச் செயலகம் முதல் கல்வி திணைக் களங்களிலும், மாகாண அரசில் அமைச்சுக்கள் முதல் பாடசாலைகள் வரையிலும் எனப் பட்டியல் நீள்கின்றது.

மாவட்டச் செயலகங்களிலே கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் மாத கணக்கெடுப்பின்போது 600றக்கும் மேற்பட்ட றீம் பேப்பர் இருப்பு இருந்துள்ளது. அவை இந்த ஆண்டின் பாவனையில் நவம்பரில் ஒரே தடவையில் 500 றீம் திட்டக்கிளையின் கணக்கில் கழிக்கப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளதான அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இதேபோன்று பிரதேச செயலகம் ஒன்றின் கணக்காளர் தனது மாமியாரின் தளபாடக் கடையி லேயே கொள்வனவில் ஈடுபட்டு வரும் சமயம் இந்த ஆண்டு ஓர் தடவை பொருள் வராமலேயே காசோலை வரையப்பட்டு வழங்கிய விடயம் தற்போது கணக்காய்விற்கு உட்பட்டுள்ளது. இதில் 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவிற்கான பொருள்கள் வராமலேயே காசோலை வரையப்பட்ட சம்பவம் அகப்பட்ட நிலையில், களஞ்சியக் காப்பாளரே தன்னை மாட்டி விட்டார் என அவர் கூறுகின்றாராம்.

கிளிநொச்சி இப்படி என்றால் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தினால் கொரோனா காலத்தில் வழங்கிய உதவிக் கொடுப்பனவில் சில முறை கேடுகள் தொடர்பில் முறையிடப்பட்டது. அதில் சாவகச்சேரி, சங்கானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் இரு கிராம சேவையாளர்கள் சிலரின் பெயர்களைப் பட்டியலில் பதிந்தபோதும் அவர்களிற்கான கொடுப்பனவை வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது இவ்விடயம் அம்பலமாகி சங்கானை கிராம சேவையாளர் பணத்தை மீள வழங்கியுள்ளமையோடு தண்டனை இடமாற்றமாக தெல்லிப்பளை பிரதேச செயலகத் திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலே கடந்த தேர்தல் காலத்தில் கொரோனா நிவாரணம் அரசியல்வாதியின் சிபார்சிலும், அரசியல்வாதியின் உதவியாளர்களாலும் வழங்கப்பட்டன எனக் கூறப்பட்டபோது பல தரப்புகளும் அதனை மறுத்தன. தேர்தல் ஆணைக்குழுவின் விசாரணையின்போது மாவட்டச் செயலக அதிகாரிகள் தங்கள் முரண்பாட்டினால் இப்படிப் பொய் உரைக்கின்றனர் எனக் கூறித் தப்பிக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையில் உடுவில் பிரதேச செயலக அதிகாரிகளின் வாக்குமூலம் உண்மையை அம்பலப்படுத்தியுள்ளதாக தற்போது கசிந்துள்ள அறிக்கை தெளிவாக காட்டுகின்றது. இருப்பினும் எந்த நடவடிக்கையும் கிடையாது.

மத்தியில் இவ்வாறானால் மாகாணத்திலும் குறைவில்லை.

வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு உட்பட்ட வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்றதான நிதி மோசடி ரூபா 2 கோடியே 80 லட்சத்தையும் தாண்டுகின்றது. இருப்பினும் மோசடியில் ஈடுபட்டவர் சாதரணமாகவே நடமாடுகின்றார். சட்ட நடவடிக்கையோ அல்லது மோசடித் தொகையை மீளச் செலுத்தலோ கிடையாது..

வடக்கு மாகாணக் கல்வி திணைக்களத்தில் 10 வருடம் மட்டுமே அனுபவம் கொண்ட ஒருவர் தற்போது ஒரு வலயக் கல்விப் பணிப்பாளராகவுள்ளார். அதாவது நேரடியாகவே கல்வி நிர்வாக சேவை மூலம் பணிக்கு வந்து தற்போது தரம் 2இல் உள்ளவர். ஆனால் இதே வலயத்தில் கல்வி நிர்வாக சேவை தரம் 1ஐ சேர்ந்தவர் தற்போது அங்கே பிரதிப் பணிப்பாளர். நியமனம் வழங்கும்போது இருவருமே தரம் 2 தான் என்று விளக்கம் கூறி அதிகாரிகள் தப்பிக்கின்றனர். ஆனால் நியமனம் வழங்கும்போதே மற்றவருக்கு தரம்1 இற்கான அனைத்து சிபார்சுகளையும் இதே மாகாண அமைச்சே உரிய இடத்திற்கு அனுப்பியிருந்தது என்ற கருத்தை மறுக்க முடியவில்லை.

இடமாற்றம், ஆளணி பங்கீடும் இன்றுவரை சீர் செய்ய முடியவில்லை. குறிப்பாக கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களிற்கு வலய, பாடசாலைகள் மட்டத்தில் அதிக வெற்றிடம் உள்ளது. ஆனால் மாகாண மட்டத்தில் ஒரு சில வெற்றிடமே உள்ளது. அது எவ்வாறு? தேவை அற்ற பாடசாலைகளிலும் சில பாடசாலைகளில் மேலதிகமாகவும் இந்த வகை ஆசிரியர்கள் உள்ளனர். உதாரணமாக விஞ்ஞான பாடத்திற்கு மாகாண மட்டத்தில் 15 வெற்றிடங்கள் மட்டுமே உள்ளது. ஆனால் வலய ரீதியில் வவுனியா வடக்கில் மட்டும் 37 வெற்றிடங்கள் உள்ளன.

நிதிச் செலவு விடயத்தில் சாவகச்சேரி வலயம் டிறிபேர்க் கல்லூரிக்கு வெளிநாட்டில் இருந்து வந்த நிதியில் மோசடி என விசாரணை இடம்பெற்றது. அந்த விசாரணையின் அடிப்படையில் முன்னாள் அதிபர் ஒருவர் ஒரு லட்சம் ரூபா மீளச் செலுத்தப்பட வேண்டும் என கண்டறியப்பட்டது. ஆனால் விசாரணைக் குழுவிற்கான செலவு 5 லட்சம் ரூபா ஏற்பட்டது.

இதேபோன்று கோப்பாயில் ஓர் அதிபரின் முறைகேடு தொடர்பில் விசாரணை இடம்பெற்றது. அந்த விசாரணைக் குழுவிற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டது. இந்த விசாரணையின் பொருட்டு எடுத்த நடவடிக்கை அதிபரிற்கு ஓர் எச்சரிக்கை கடிதம் மட்டுமே வழங்கப்பட்டது.

நிதி விடயத்தில் மட்டுமல்ல நிர்வாக விடயத்திலும் இதே நிலைமைதான்.

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் உள்ள நிர்வாக அலுவலர் தனது நியமனத்தின்போது க.பொ.த சாதாரணம் கூட சித்தி அடையாதவர் என பின்பே கண்டறியப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் இன்றியே உள்ளார். நடவடிக்கையும் எடுக்க முடியாது, ஏனெனில் இலங்கையிலேயே க.பொ.த. சாதாரண தரத் தகைமையுடன் கல்வித் துறைக்கு வந்த ஒருவர் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த மாகாணம் இது அல்லவா....?

வடக்கு மாகாணத்தில் அதிக ஊழல், மோசடி மிக்க துறையாக சுகாதாரத் துறையே உள்ளது.

வடக்கு மாகாணத்தில் அதிக ஊழல், மோசடி மிக்க துறையாக சுகாதாரத் துறையே உள்ளது என்பதற்கு பல உதாரணங்கள் ஏற்கனவே காட்டப்பட்டிருந்தாலும் இப்போது இன்னொன்று.

அண்மையில் ஒரு நோயாளர் காவு வண்டி தனியே சாரதியுடன் மட்டும் கொழும்பு சென்று திரும்பியுள்ளது. இதனால் இது ஓர் தனிப்பட்ட பயணம் என்பதும் வெளிப்படுகின்றது. இதன்போது நோயாளர் காவு வண்டி விபத்திற்கு உள்ளாகி பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. புதிய நோயாளர் காவு வண்டி என்பதனால் முழுமையான காப்புறுதி உண்டு. இருப்பினும் அந்த நோயாளர் காவு வண்டியைத் திருத்த அமைச்சின் பணத்திற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

**நல்ல நிர்வாகம்**

முழுமையான காப்புறுதி வலுவில் உள்ளதால் காப்புறுதி நிறுவனம்தானே வாகனத்தை திருந்த வேண்டும் என ஆராய்ந்தபோது அங்குதான் சிக்கலே ஏற்பட்டது. அதாவது விபத்து இடம்பெற்ற சமயம் சாரதி அதிக மதுபோதையில் இருந்தார் என பொலிஸாரினால் அறிக்கையிடப்பட்டுள்ளது. இதனால் காப்புறுதி நிறுவனம் சாரதி போதையில் இருந்தமையில் காப்புறுதிப் பணம் வழங்க முடியாது எனத் தெரிவித்து விட்டது. அவ்வாறானால், அந்தச் சாரதி பணி நீக்கப்பட்டு, அவரது சொந்தப் பணத்தில் வாகனம் திருந்த வேண்டிய இடத்தில், சாரதிக்கு வேறு வாகனம் வழங்கப்பட்டுள்ளதோடு திருத்தச் செலவிற்கு அரச பணத்திற்கே அனுமதி கோரப்பட்டுள்ளது.

பொதுவாக புதிய நியமனம் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். ஆனால் அதிகாரிகளுக்கு அச்சம் தரும் நியமனங்களும் உண்டு.

வடக்கு மாகாணத்திலே மாகாண சபைக்கு உட்பட்ட 114 வைத்தியசாலைகள் உள்ளன. இங்கே 300 வரையான வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளது. அண்மையில் இந்த இடத்திற்கு 117 புதிய வைத்தியர்கள் வருகை தந்துள்ளனர். அவ்வாறானால் மகிழ்ச்சியான விடயம் அல்லவா என வினாவினால் அதிகாரிகள் பெரும் குண்டைத் தூக்கிப்போடுகின்றனர்.

அதாவது வடக்கில் 37 வைத்தியசாலைகளிற்கு நிரந்தர வைத்தியர் கிடையாது. அதிலும் 17 வைத்தியசாலைகளில் எந்த வகையிலும் ஒரு வைத்தியர் கூடக் கிடையாது. தற்போது 117பேர் வந்தாலும் இந்த 17 வைத்தியசாலைகளில் ஒரு வைத்தியசாலைக்கே டாக்டர் நியமனம் கிடைக்கும்.

ஏனெனில் டாக்டர்களின் விருப்ப முன்னுரிமையின் அடிப்படையில்தான் அவர்கள் பணிபுரிவதற்கான வைத்தியசாலைகள் ஒதுக்கப்பட முடியும்.

இதேநேரம் ஏற்கனவே பணியாற்றும் வைத்தியர்கள் மாதத்தில் 10 நாள் பணியாற்றிவிட்டு 20 நாளிற்கு தினக் குறிப்பு எழுதி, அந்த 20 நாளிற்கும் மேலதிக நேரக் கொடுப்பனவையும் பதிவு செய்வார்கள். மாதச் சம்பளம் மத்திய அரசில் இருந்து வரும். ஆனால் மேலதிக நேரக் கொடுப்பனவு மாகாண சபைக்கு உரிய ஒதுக்கீட்டில் இருந்தே வழங்க வேண்டும். அதை எண்ணும் போது இதனைவிட புதிய வைத்தியர்கள் இங்கு நியமிக்கப்படாமலேயே இருக்கலாமோ எண்ணத் தோன்றுகின்றது. என்கின்றனர் மாகாண உயரதிகாரிகள்.

மத்தியும் மாகாணமும் இந்த நிலமை என்றால் உள்ளூராட்சியும் இதற்குக் குறைவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 2016ஆம் ஆண்டில் இடமாற்றம் மூலம் வந்த ஓர் பெண் பணியாளர் வெறுமனே 7 மாதங்கள் பணியாற்றிய நிலையில் 28 லட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டது. இவ்வாறு மோசடியில் ஈடுபட்டவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு இடம்பெறுகின்றதாம் என 5 ஆண்டுகளாக பதில் கூறப்படுகின்றது. வட்டிப் பணத்தில் சாப்பிடுகின்றாரோ என்னவோ? நிலைமை அவ்வாறே உள்ளபோதும் திணைக்கள ரீதியிலான விசாரணையும் பெரிதாக நகரவில்லை . ஏனென்றால் அனைத்து மூல ஆவணங்களையும் நீதிமன்ற விசாரணக்கு அள்ளி நீட்டி விட்டனர். இதனால் திணைக்களத்தில் உரிய ஆவணங்கள் இல்லாத நிலைமை. இதனால் திணைக்கள ரீதியிலான விசாரணை முடங்கிப் போய்க் கிடக்கின்றது.

இவை தற்போது எமது கவனத்திற்கு எட்டியவை. எட்டாமல் உள்ள பட்டியல் எந்தளவோ என்பது கேள்வியாகவே உள்ளது.

வடக்கின் நிர்வாக நிலைமை இந்த அளவிலேயே உள்ளது என்பதே நிதர்சனம்.


> **இடமாற்றம், ஆளணி பங்கீடும் இன்றுவரை சீர்செய்ய முடியவில்லை. குறிப்பாக கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களிற்கு வலய, பாடசாலைகள் மட்டத்தில் அதிக வெற்றிடம் உள்ளது. ஆனால் மாகாண மட்டத்தில் ஒரு சில வெற்றிடமே உள்ளது. அது எவ்வாறு?**

# மாவீரர் நினைவேந்தல் தமிழ்த் தலைவர்களால் சரியாக கையாளப்பட்டதா...?

## சட்டத்தரணி செ.ரவீந்திரன் ஆஸ்திரேலியா

**இ**லங்கை அரசின் பாரிய அழுத்தங்களுடன் கடந்து சென்ற மாவீரர் நினைவேந்தலும் தமிழ்த்தலைவர்களின் நிலைப்பாடும் தொடர்பாகத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் முக்கியஸ்தரான ஆஸ்திரேலியாவில் வதியும் சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரனிடம் 'காலைக் கதிர்' முன்வைத்த கேள்விகளும் அவர் தெரிவித்த பதில்களும் இங்கே தரப்படுகின்றன.

**கேள்வி:-** இந்த (2020 ) ஆண்டு மாவீரர் தினத்தை எங்களது தமிழ் அரசியல் தலைவர்கள் சரியாகக் கையாண்டனரா?


பொன். சிவகுமாரன்

**பதில்:-** சிங்களப் பேரினவாதத்தில் சிலிர்த்து எழுந்த அரசும், அவர்களது அரசியல் சித்தாந்தமும் மாவீரர் தினத்தை நடத்த அனுமதிக்காது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்துதான் இருந்தது.

அதைத் திடமாக அரசு அறிவித்தபோது, மடிந்த மாவீரர்களை நினைவுகூர எங்களுக்கு உரிமையுண்டு என்று வாதித்தார்கள். ஒவ்வொருவரும் அறிக்கை விட்டார்கள்.

ஆனால், மக்களை அந்த உரிமைகளை நிலை நிறுத்துமுகமாக ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

நிலைமைகள் இறுக, நீதிமன்ற தீர்ப்புக்கள் வர, கொரோனா இல்லாவிட்டால் அநேகர் சென்னையிலிருந்து மாவீரர் தின அறிக்கைகள் விட்டிருப்பார்கள். அல்லது புலம் பெயர் மக்கள் விடுத்த அறிக்கைகளில் குளிர் காய்ந்திருப்பார்கள்.

நல்ல காலம், வீட்டிலும் நினைவு கூரக் கூடாது என்ற உத்தரவு வரவில்லை. வந்திருந்தால், இந்த கெடுபிடிக்குள் என்னதான் செய்திருக்கலாம்...? என்று ஜனாதிபதிகோட்டாவை வசைபாடி கைவிரித்திருப்பார்கள்.

ஆனால் ஒரு பாதிரியாரும், இளைஞனும் முச்சந்தியில் நின்றவர்களுக்கு எப்படி முன்னேறுவது என்று காட்டியிருக்கின்றார்கள். காணாமல் போன தம் உறவுகளைத் தேடி ஒருவருடத்துக்கும் மேலாக அவர்களின் உறவுகள் அஹிம்சை முறையில் கவனஈர்ப்பு செய்கிறார்கள். அந்த வழியிலாவது மக்களை ஒருங்கு திரட்டி சாத்வீகமாக தங்கள் எதிர்ப்புகளை அந்த நாளில் ஏதோ ஒரு வழியில், காண்பிக்க உத்வேகம் கொண்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை.


கிலாரி கிளிண்டன் மற்றும் மிஷெல் ஒபாமாவால் பாராட்டப்படும் ஜன்ஸீலா மஜீட்.

ஆகக் குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகத்தின் முன்னாலோ அன்றி, தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கிய மற்ற சர்வதேச நிறுவனங்களின் முன்னாலோ தோன்றி, குறிப்பிட்ட அந்த உரிமை மறுக்கப்படுகிறது என்று நின்றிருக்கலாம். அதனால் சிலரும் தலைவர்களும் பொலிஸ் நிலையங்களுக்குப் போக நேர்ந்திருக்கும்.

### அப்படியில்லாமல் போராட்டம் வெடிக்காது. சிவகுமாரனும் ஷோபாவும்

**கேள்வி:-** 1974 இல் முதன் முறையாக தன்னுயிரை தந்த உரும்பராய் சிவகுமாரன் போன்றோரும் மற்றும் உயிர் நீத்தோரும் நினைவுகூரப்படுகிறார்களா?

**பதில்:-** தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிரை தந்த முதல் இளைஞன் சிவகுமாரன். மீண்டும் பிறப்பேன், பிறந்து தமிழ் இன விடுதலைக்காக போராடுவேன் என்று இறக்கும் தறுவாயிலும் சொல்லிச் சென்றான். ஆனால், துர்ப்பாக்கியம் என்னவென்றால், நடத்தப்படும் மாவீரர் நினைவு நாள்களில் அவன் நினைக்கப்படுவதில்லை.

அதேபோன்று தன்னுயிரை இழந்த முதல் பெண் போராளி மதிவதனி. அது அவரது இயக்கப் பெயர். அவரது இயற் பெயர் ரோபா. இவர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒன்றுவிட்ட சகோதரியாவார். டக்ளஸ், ஈ.பி. ஆர்.எல். எவ். இயக்கத்தின் இராணுவப் பிரிவுக்குத் தளபதியாக இருந்த காலங்களில் காரைநகர் கடற்படை தளத்தினைக் கைப்பற்ற நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார்.


போராளி சோபா மதிவதனி

ஷோபா போன்று தங்களது உயிரை போராட்டத்தில் இழந்தவர்கள், சக போராளிகளின் மோதல்களால், உட்பூசல்களால் உயிர்கள் பறிக்கப்பட்டவர்கள் வரலாற்றின் பாதை ஓரங்களில் விடப்பட்டனர். முடுக்கிவிடப் பட்ட பிரச்சாரங்களால் தமிழ் மக்களும் தம்மினத்துக்காக உயிரிழந்த இவர்களை "ஊத்தை வேட்டிக்காரராக" கணக்கெடுத்தனர்.

அந்த உடன்பிறப்புகளின் இன்றிருக்கும் தலைவர்களையும் அரவணைத்து (அவர்கள் தமிழ்த் தேசிய அடிப்படையில் இணைந்திருந்தாலோ அன்றி ஒன்றிணைந்து போகும் ஒரு வழியை அணுகியிருந்தாலும்) எல்லோரையும் நினைவு கூர வேண்டும் என்ற முன் னெடுப்பு இருந்திருந்தால், அதனை புலிகளை மீளக் கட்டியெழுப்ப எத்தனிக்கிறார்கள் என்ற அரசாங்கத்தின் பிரச்சாரத்துக்கு பலம் குறைந்திருக்கும்.

இவற்றை ஆரம்பத்திலேயே நாம் தட்டிக் கேட்கவில்லை. பலரின் மௌனங்கள் சில பேருக்கு சாதகமாவது போல் இதுவும் வளர்ந்து, பரந்து, அரசாங்கத்துக்குப் புலிகளின் மாவீரரையே இவர்கள் நினைவுகூர எத்தனித்திருக்கிறார்கள் என்ற கருத்துக்கு பலம் சேர்த்தது .

### மக்கள் எழுச்சி

**கேள்வி:-** சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் இருக்கும் புதிய அரசியல் சூழலில் அது ஏற்படுத்தும் அடக்கு முறைக்குப் பதில் என்ன?

**பதில்:-** ஆளுமையும் திடசங்கற்பமும் கொண்ட தலைவர்களால் வழி நடத்தப்படும் மக்கள்தான் 'மக்கள் எழுச்சி' பெறுதல் வேண்டும். 1956 இல் பண்டா – செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது ஜே.ஆர். அதனை எதிர்த்து கண்டி யாத்திரையை அறிவித்தார்.

பண்டாரநாயக்கா, அந்த யாத்திரை வன்முறை யையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தும் என்று அதற்குத் தடை உத்தரவுகள் பிறப்பித்தார். ஆனாலும் ஜே.ஆர். தடையுத்தரவுகளை மீறி கண்டி யாத்திரையை மேற்கொண்டார். கடைசியில் பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப் பட்டது.

சீனாவில் புரட்சி செய்த மாணவர்கள் ரியன மென் சதுக்கத்தில் பீரங்கித் தாங்கிகள் எதிர்கொண்டனர். நசுக்கப்பட்ட நிலையிலும் கொடியை உயரப் பிடித்துக் கொண்டு பீரங்கித் தாங்கியின் முன்னால் நிமிர்ந்து நின்ற மாணவனின் மனோதிடத்தை உலகடங்கிலும் பரவிய படங்களில் பார்த்தோம்.

எதிர்நீச்சலிட ஜே.ஆரின் தலைமையில் ஆளுமையும் சாதிக்கும் ஆற்றலும் இருந்தது. பதுங்கிப் போகும் குணமிருக்கவில்லை. சீன மாணவனுக்கு திடசங்கற்பமிருந்தது. இதையே ஹொங்கொங் போராட்டத்தில் மாணவர்களிடமிருந்து பார்க்கிறோம். அவ்வளவு ஏன்?

எங்கள் கடல் நீரினால் எங்களது உப்பளங்களில் விளைகின்ற உப்புக்கு நாங்கள் வரி கொடுக்கத் தேவையில்லை, அது எங்களது உரிமை என்று மகாத்மா காந்தி, மக்களை உப்பளங்களில் உப்பை தங் களது உரிமையாக எடுக்கச் சொல்லி உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி வைத்தார். அது ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரிது. அப்படியான ஒரு சாத்வீக போராட்டத்தை முன்னெடுத்து மக்களை வழிப்படுத்த ஏதும் சிந்தனைகள், திட்டங்கள் எமது தமிழ்த்தலைவர்களிடம் இருந்ததாக தெரியவில்லை.

### தள்ளாடும் நிலைமை

**கேள்வி:-** கடந்த காலங்களைத் தாண்டி, தற்போதைய நிலையை அனுசரித்து எங்கள் உரிமை மற்றும் வாழ்வாதாரப் போராட்டங்கள் என்பன தள்ளாட வேண்டுமா?

**பதில்:-** சில மாதங்களுக்கு முன்பு, தற்போது நாடாளுமன்றத்திலிருக்கும் பழைய போராட்ட குழுவின் தலைவர் ஒருவருடன் பேச நேர்ந்தது. 'போர் முடிந்தபின் தமிழரின் விடுதலைப் போராட்டமல்ல, அவர்களின் உரிமைப் போராட்டத்திலாவது நாங்கள் எங்கே போகிறோம்?' – என்று அவரிடம் கேட்டேன்.

அவர் அதற்கு சுருக்கமாக "நான் மட்டுமல்ல, எல்லோரும் இதில் அரசியல்தான் செய்கிறோம். அது காலத்தின் மாற்றம். நாங்கள் கடந்த காலங்களைத் தாண்டி வரவேண்டும்." – என்றார்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தில் கையெழுத்திட்ட தலைவர்களைச் சுட்டிக் காட்டி, 'இவர்கள் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் வெற்றிகளின் பின்னர் மக்கள் எங்களுக்கு ஒருமித்த, பிரிக்கப்படாத இலங்கைக்குள் ஓர் அரசியல் தீர்வுக்கு ஆணை தந்திருக்கின்றார்கள் என்று பட்டவர்த்தனமாக சொன்னார்களே. அதன் அர்த்தம் என்ன? அதில் கொஞ்சமாவது பெற்றோமா?' – என்று அவரிடம் வினவினேன்.

அவரோ, "அண்ணை தனி நாடு கேட்க ஒரு கால கட்டம் இருந்தது. கேட்டோம். பின்னர் ஆயுதப் போராட்டம் என்ற காலகட்டம். அதையும் செய்தோம். அப்பொழுதும் நாடாளுமன்றத்துக்கு போகிற அரசியலை விட வில்லை. இப்போது இந்தக் கால கட்டம். நாடாளுமன்றத்துக்கு வந்துவிட்டோம். இதனை ஒட்டித்தான் ஏதோ செய்யவேணும்" – என்றார்.

அப்படியானால் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், சந்திரிகா காலத்தில் அதிலும் ஒருபடி மேலேசென்ற மாநில சுயாட்சி, பின்னர் சர்வகட்சி மகாநாடுகளின் பெறுபேறுகள், நோர்வே அனுசரணைப் பேச்சு வார்த்தைகள் என்று நெருடினேன். ஆனால், இந்த இடைக்காலங்களில் அவை ஊடுருவப்பட்டு பறிபோயிருக்கின்றன.


சட்டத்தரணி செ. ரவீந்திரன்

# வேலணைப் பிரதேச சபைக்கு லயன்ஸால் முகக்கவசங்கள்!





வேலணை பிரதேசத்தின் செயற்பாடுகளுக்காக சுன்னாகம் லயன்ஸ் கழகம் மற்றும் சுன்னாகம் லியோ கழகத்தினரால் வேலணைப் பிரதேச சபைக்கு ஒரு தொகுதி முகக் கவசங்களும் தொற்று நீக்கிகளும் நேற்று (வியாழக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

இந்த முகக்கவசங்களை நீர்கொழும்பு ஒறியன்ற் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் பிளஸிடஸ் பீற்றர் வழங்கியிருந்தார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் பா.மரியதாஸ், சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் மற்றும் சுன்னாகம் லியோ கழகத்தினர் இணைந்து வேலணை பிரதேசசபையின் வருமானவரிப் பரிசோதகர் சி.கௌரீஸனிடம் இவற்றை வழங்கிவைத்தனர்.

லயன் பிளஸிடஸ் பீற்றர் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலுமுள்ள 30 லயன்ஸ் கழகங்களுக்கும் தொற்றுநீக்கி மருந்துகளையும் முகக் கவசங்களையும் வழங்கி சகல கழகங்களூடாகவும் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்கும் தனது சேவையை சென்றடையச் செய்துள்ளார். நேற்று முன்தினம் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் சுன்னாகம் பொதுச்சந்தை வியாபாரிகளுக்கு முகக்கவசங்கள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது வவுனியா நகரப் பகுதியில் குழப்பம்





வவுனியா இலுப்பையடிப்பகுதியில் கெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் தாம் கைதுசெய்துள்ளனர் எனத்தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் ஹெரோயின் விற்பனை இடம்பெற்று வருவதாகப் பொலிசல்ஸாருக்குக் கிடைத்த தகவலுக்கிற்கமைய, ஹெரோயினை கொள்வனவு செய்வதற்காகப் பொலிஸாரால் திட்டமிடப்பட்டு நபர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் அனுப்பப்பட்ட நபர் போதைப்பொருளை கொள்வனவு செய்தமையுடன், விற்பனை செய்த நபரை பொலிஸாரிடம் அடையாளப் படுத்தியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்ய முனைந்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் குழப்பமான சூழல் ஏற்ப்பட்டிருந்தது.

ஹெரோயினை விற்பனை செய்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் தான் ஐயப்பன் விரதம் அனுஷ்டித்து வருகிறார் எனவும், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடவில்லை என்றும், தன்னைக் கைது செய்யவேண்டாம் என்றும் பொலிஸாரிடம் மன்றாடியுள்ளார். இதனால் குறித்த பகுதியில் பொதுமக்கள் ஒன்று கூடியமையுடன், குழப்பமான நிலையும் ஏற்ப்பட்டிருந்தது. பின்னர் அந்நபர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை கைதுசெய்யப்பட நபரிடம் மேலும் போதைப்பொருள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வவுனியா சதோசவிற்கு பின்பான பகுதியில் பொலிஸாரால் தேடுதல் நடாத்தப்பட்டது.


சமூக நல அறிவிப்பு




கொத்தணிகளாக உருவாகும் கொரோனா!



இலங்கையை ஆட்டிப்படைக்கும் கொரோனா – பேலியகொட, மருதனார்மடம் கொரோனா கொத்தணியை முறியடிப்போம்!

- பொதுவாக கொழுப்பு மற்றும் புரதங்கள், எண்ணெய், கிரீஸ், போன்ற உடலில் எளிதாக ஒட்டிக்கொள்ளக்கூடிய, தண்ணீரால் சுத்தம் செய்ய இயலாத மூலக்கூறுகள் சோப்பு கொண்டு நன்றாக கழுவும் போது சுத்தம் ஆவது அனைவரும் அறிந்ததே. இதேதான் இந்த கொரானா வைரஸுக்கும்.
- கொரானா வைரஸும் ஓர் உயிரற்ற மூலக்கூறு. இதன் முக்கிய உறுப்பு RNA - ஆகும். இந்த RNA உறுப்பு தான் நம் உடலில் உள்ள செல்களுடன் இணைந்து புரோட்டீன் உதவியோடு தன்னை தொண்டை மற்றும் நுரையீரலில் பெருக்கி இறுதியாக சிறுநீரகத்தைச் செயலிழக்க செய்து இறப்பை ஏற்படுத்தும். இதனை சுற்றி யுள்ள கொழுப்பு மற்றும் புரதம்தான் இதனை பாதுகாக்கும் கவசம்.
- சவர்க்காரம் கொண்டு கைகளை கழுவும்போது (30 செக்கன்களுக்குக் குறையாமல்) இதனை பாதுகாக்கும். கொழுப்பு மற்றும் புரத மூலக்கூறுகளை சவர்க்காரத்தின் மூலக்கூறுகள் அழித்து சுத்தமாக ஓடும் தண்ணீரில் வெளியேற்றிவிடும். இதனால் வைரஸ் செயல் இழந்து அழிந்துவிடும்.

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-




City Medical Care

சிற்றி மெடிக்கல் கெயார்




Retail Pharmaceutical & Grocery

Wholesale Pharmaceuticals

Orthopedic Wholesale & Retail

Mother & Baby Needs

558A Hospital Rd, Jaffna

0212 217 661

558 A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்




# ஈழத்து சிதம்பரத்தில் திருவாதிரை விழா

ஈழத்து சிதம்பரத்தில் நிகழும் திருவாதிரை விழாவும், ஆருத்திரா தரிசனமும், பக்தர்களின் காவடி ஆட்டமும், மங்கையரின் பாற்குடப் பவனியும், திருவூடல் நிகழ்வும் கண்டு மகிழக் கண்ணாயிரம் வேண்டும். தனுமாசத்துப் பூரணையை அடுத்து வரும் திருவாதிரையை முடிவாகக் கொண்டு அதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்து நடைபெறும். மாதந்தோறும் திருவாதிரை வருமாயினும் உசத் காலமான தனுமாதத் திருவாதிரை சிறப்புடையது.

திருவாதிரை விழாவில் நடராஜ மூர்த்தி வழிபாடு சிறப்புடையது. இவ்விழாவில் ஒன்பதாம் நாள், தேர்த்திருவிழாவின் பின்னர் திருவாதிரை விசேட அபிடேகத்தைத் தரிசிப்பது சிவபுண்ணியம். மூஞ்சகேசி முனிவர், மூவா அன்பிற் பதஞ்சலி, கார்க்கோடகன், இந்திரன், திருமால், ஏழு முனிவர்கள் ஆகியோர் திருவாதிரை விரதம் நோற்று, திருநடனம் கண்டு பிறவா யாக்கைப் பேறு பெற்றனர். இத்தகைய சிறப்புடையது திருவாதிரை நோன்பு.

திருவாதிரை தினத்தன்று உண்ணா நோன்பு காத்து மனத்தாலும், வாக்காலும், மெய்யாலும் ஈசனை நினைந்து, அறஞ் செயல்கள் ஆற்றி, அடியார்களுக்கு அமுது அளிப்பின் அவர்கள் பெருவாழ்வு வாழ்வர் என்பது ஈழத்துச் சிதம்பர மக்களின் நம்பிக்கை.

**திருவா திரையில் உணவொழித்துச்**
**செம்மை மனத்தான் மொழிமெய்யால்**
**ஒருவா தறங்கள் மிகப்புரிந்தே**
**ஓங்கு நோன்பு மேற்கொண்டு**
**வருநா ளடியார்க்கு அமுதளித்து**
**வண்சோ றுண்ணும் வழக்குடையார்**
**பெருவாழ் வுற்றுச் சிவனடிக்கீழ்ப்**
**பிறங்கு வார வூழி யெலாம்**

திருவாதிரை விழா நிறைவேறி ஆருத்திரா தரிசனம் பெற்ற பின்னர் ஈழத்துச் சிதம்பரத்தில் பகல் முழுவதும் நூற்றுக்கு மேற்பட்ட அடியார்கள் காவடி தூக்கி இக்கோயில் வந்து நேர்திக்கடன் செய்வர். 'தாதெய் தாதிமி, தாதெய் தாதிமி,'என்று பாதந்தூக்கிக் காவடி ஏந்தி ஆடிக் களிப்பர். இவர்களைப் பின் தொடர்ந்து, மங்கையர் பாற்குடம் சுமந்து வருவர். அவ்வாறு வரும் வேளையில் அனைத்துச் சந்திகளிலும் தேங்காய் உடைத்து வருவர். ஐயனார் சந்நிதிப் பூசகர் காவடிகளைத் தாங்குவார். இக்காட்சி பற்றிய பாடலைக் கண்டு களியுங்கள்

**தாதெய் தாதிமி தாதெய் தாதிமி**
**தாதெய் தாதிமி என்றவர்**
**பாதந் தூக்கியே தோளிற் காவடி**
**பரம னாளிலே யாடிநல்**
**வீதி யிரண்டினும் வீதியொன்றினும்**
**மேவி வந்துதந் நேர்த்தியின்**
**காதன் மெலெழுந் தார்வங் கூர்ந்திடக்**
**கடன்க ழிப்பவர் பற்பலர்**

இதன் பின்னர் ஈழத்துத் தில்லையில் நடைபெறும் திருவூடல் ஒரு கண் கொள்ளாக் காட்சி. மக்கள் மத்தியில் பக்தி உணர்வினை ஊட்ட இறைவன் செய்த திருவிளையாடல்களை திருவிழாக் காலத்தில் கோயில்களில் நடித்துக் காட்டும் மரபு நீண்ட காலமாகத் தமிழர்களிடையே நிலவுகிறது. அம்மரபு வழியில் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவூடல் நிகழ்கிறது. திருவூடல் அருளலையே குறிக்கும்.

திருவூடல் நிகழ்வில் உமையாள் சிவனாருடன் ஊடியதை பக்தர்கள் இக்கோயிலில் நடித்துக்காட்டுவர். அவ்வாறு உமை யாள் எதற்காக ஊடினாள்? கங்கையாம் நங்கையைச் சடையில் ஒளித்து வைத்த சிவனார் கள்ளத்தாலே அம்மை ஊடல் கொண்டாள். கங்கையை தன் சடையில் சிவனார் வைத்ததைக் காரணம் காட்டி இவ்வூடல் இடம் பெறும். அம்மை ஊடியது மட்டுமன்றி தன் இருப்பிடக் கதவையும் தாழ்ப்பாள் இட்டு மூடிவிடுகிறாள்.

**'கங்கைசடைக் கரந்த கள்ளஞ்**
**சிந்தையெழ நீள்கதவு தாழடைத்துத்**
**திருவூடல் சிறந்து நின்றாள்'.**

இத்தகைய துன்பநிலையில் தான் உதவிய சுந்தரரைச் சிவனார் நினைத்தார். சுந்தரர் அங்கு வரவே அவரிடம் தனக்காக தூது போகுமாறு வேண்டினார். சுந்தரரும் அவ்வாறு செய்கிறார். உமையாள் காரணம் கேட்கச் சுந்தரர் இருவரையும் சமமாக மதித்தலை எடுத்துக் கூறுவார். அம்



மையின் உடலால் சிவனார் செந்தழல் பட்ட மெழுகுபோல் உருகுவதாக கூறுவார். முழு உரிமை தன் மனைவியாகிய உமையாளுக்கு வழங்கி அவளை இடப்பாகத்தே வைத்த பான்மையைச் சுந்தரர் நயமாக அம்மையிடம் எடுத்துச் சொல்வார்.

இதைக் கேட்ட அம்மை சீற்றம் அடைந்து சுந்தரருடன் வாதிடுவாள். 'எம்பெருமான் போல் நானும் ஓர் ஆண்மகனை எனது கூந்தலினுள் ஒளித்து வைப்பின் அவர் பொறுமை கொள்வாரா? அவர் அதனை மனதார ஏற்பாரோ?'

**நம்பிகேளம் பெருமானார் நமக்குரிமைத்**
**தன்மையினால் நான்மை என்றீர்.**
**எம்பெருமான் போல்நானும் என் குழற்குள்**
**ஒரு மகனை எடுத்து ஒளித்தால்**
**எம்பெருமான் பொறுப்பாரோ?'**

மூவுலகை அழிக்க நின்ற கங்கையை அடக்க வேண்டியே, சடையில் அதனை வைத்தார் என்றும் விளக்கினார் சுந்தரர். மேலும் அம்மையார் இன்றிச் சிவனார் ஒருநொடிப் பொழுதுதானும் இயங்க மாட்டார் என்றும் சுந்தரர் அம்மையிடம் இறைஞ்சினார். ஈற்றில் புலவிநீங்கி உமையாள் இறைவனிடம் எழுந்தருளினார்.

'ஈழத்துச் சிதம்பரத்தே ஆதிரை விழாத் தரிசிக்காதார் கண்ணென்ன கண்ணே! ஆதிரை விழாத் தரிசித்த அடியார்கள் கண்ணெல்லாம் தவஞ்செய்த கண்ணே!' என்று யாத்திரை வந்த சிவனடியார்கள் இன்பத்தில் திளைப்பர்.

(தொடரும்...)

# பண்டிகைக் காலத்தில் அனைவருக்கும் கடன்

## அரசு அதிரடி அறிவிப்பு

எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய சலுகை வட்டி விகிதத்தில் நிதி வசதிகளை வழுங்க அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

இந்தக் கடன் வழுங்கல் 03 பிரிவுகளின் கீழ் இடம்பெறும். மாதத்திற்கு ரூ. 50,000 க்கு மேல் சம்பளம் அல்லது வருமானம் பெருவோருக்கு ரூ. 50,000 கடனாகப் பெறலாம். மாதச் சம்பளம் அல்லது வருமானம் ரூ. 25,000 க்கும் ரூ.50,000 க்கும் இடைப்பட்டவர்களுக்கு ரூ.25,000 கடன் வழுங்கப்படும். மாதச் சம்பளம் அல்லது வருமானம் ரூ.25,000 க்கும் குறைவாக இருந்தால், கடன் தொகை ரூ.10,000 ஆகும். கடன்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக வழுங்கப்படுகின்றன.

துணை நிவாரண நிதி வசதிகள் பெற விரும்பும் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்கள் தங்கள் நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நிறுவனத்தின் தலைவர் தனது ஊழியர்களின் சான்றளிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலை சேவை நிலையத்துக்கு அருகிலுள்ள அரச வங்கியில் சமர்ப்பிக்கும்போது, அந்தக் கிளையால் ஊழியர்களின் கணக்குகளுக்கு உடனடியாக அந்தத் தொகை வரவு வைக்கப்படும்.

கடன் தொகை 10 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அறவிடப்படும் மாத வட்டி 0.625 வீதமாகும். கடன் தொகை 2021 ஜனவரி முதல் ஒக்டோபர் 31 வரையிலான காலப்பகுதியில் ஊழியரின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும்.

அரச ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் சமுர்த்தி பெறுநர்களுக்கான கடன் வழுங்கல் ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கிக்கு வழுங்கப்பட்டுள்ளது.

ஓட்டோக்கள், பாடசாலை வான் மற்றும் பஸ் உரிமையாளர்கள் மற்றும் தனியார் பஸ் ஊழியர்கள் தங்கள் வங்கிக்கணக்குகள் பேணப்படும் அரச வங்கிகளில் தங்கள் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் சலுகைக் கடனுக்காக விண்ணப்பிக்கலாம். இந்தப் பிரிவுக்குள் வராத ஆனால் அரச வங்கிகளில் கணக்குகளை வைத்திருக்கும் நாளாந்த வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கும் தங்கள் வங்கிகளின் ஊடாகநிதிவசதிகளுக்குவிண்ணப்பிக்கலாம்.

கொரோனா சவாலுக்கு மத்தியில் பின்னடைந்துள்ள பொருளாதாரம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றிலுமாக மீட்டு, 2020இல் இழந்த முன்னேற்றத்துடன், 2021 ஆம் ஆண்டில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது அரசின் நோக்கமாகும்.

தொற்றுநோய் காலப்பகுதியில் சுமார் இரண்டு மாத பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் ஏற்றுமதி, சுற்றுலா, நிர்மாணத்துறை மற்றும் ஏனைய உற்பத்தி மற்றும் சேவைகளை படிப்படியாக இயல்புநிலைக்குக் கொண்டுவர உழைக்கும் மக்களும் வர்த்தக சமூகமும் பெரும் தியாகங்களைச் செய்தனர். இதற்கு சுகாதாரம், பாதுகாப்பு, பொலிஸ் மற்றும் அரச சேவைகளிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது.

எனவே, 2020 ஆம் ஆண்டில் விவசாய உற்பத்தித் துறையில் ஒரு மறுமலர்ச்சிக்குள் பிரவேசிக்க முடிந்தது. நகர்ப்புற மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கான உணவு விநியோகத்தை இது உறுதி செய்தது. அவ்வாறு பங்களித்த மக்களுக்கு வழுங்கப்படும் ஊக்குவிப்பாக பண்டிகை காலங்களில் இதுபோன்ற நிதி வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளன — என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இனவாதிகளின் கொக்கரிப்புக்கு அடிபணியாது மாகாண சபை முறையை மேலும் பலப்படுத்துக!

## அரசிடம் வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு. டிசெ. 17

புதிய அரசமைப்பு ஊடாக மாகாண சபை முறைமை மேலும் பலப்படுத்தப்படவேண்டும். அதைவிடுத்து இனவாதிகளின் கொக்கரிப்புகளுக்கு அடிபணிந்து மாகாண சபை முறைமையைபலவீனப்படுத்தும்நடவடிக்கையில் அரசு இறங்கக்கூடாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்தநாட்டில் வாழும் சிறுபான்மையின மக்கள் உண்பதற்காக மட்டுமே வாய்திறக்கவேண்டும், அவர்களுக்கு ஒருபோதும் உரிமைகள் வழங்கப்படகூடாது என்ற மமதையில் செயற்படும் பேரினவாத அரசியல்வாதிகள், அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள உரிமைகளைக்கூட பறிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான சதித்திட்டங்களைத் தீட்டி வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகவே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது, அம்முறைமை நீக்கப்பட வேண்டும் என மீண்டும் கோஷம் எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

புதியதொரு அரசமைப்பு இயற்றப்படவுள்ள சூழ்நிலையில், மாகாண சபை முறைமைக்கு எதிராக அரசின் அனுசரணையுடன் இயங்கும் இனவாதிகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை புதிய அரசமைப்பின் ஊடாகப் பலவீனப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற அச்சமும் மேலோங்கியுள்ளது.

மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு மேலும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், மாகாண சபைகள் முறைமை மேலும் பலப்படுத்தப்படவேண்டும் எனத் தமிழ் பேசும் மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், அவர்களின் உரிமைக் குரலை நசுக்குவதற்காக - ஒடுக்குவதற்காக அரசு, திட்டமிட்ட அடிப்படையில் இனவாதிகளைக் களமிறங்கியுள்ளதா என்ற வினாவும் எழுகின்றது.

அதேவேளை, தம்வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. பெரும்பான்மை இன மக்களை இயக்கக்கூடிய இனவாத சக்திகள் உள்ளன என்ற நம்பிக்கையில் அரசு, மாகாண சபை முறைமையில் கைவைக்கும் பட்சத்தில் அது பாதகமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். இராஜதந்திர மட்டத்திலான நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிவரும்.

எனவே, மாகாணசபை முறைமையில் கூடிய விரைவில் அரசு நடத்த வேண்டும். அதன்பின்னர் புதிய அரசமைப்பு ஊடாக மாகாண சபை முறைமையைப் பலப்படுத்த வேண்டும். - என்றுள்ளது.

# கொரோனாத் தொற்று அபாயத்தால்
# வடக்கில் சகல சந்தைகளும் மறு அறிவித்தல் வரை பூட்டு

## நடமாடும் விற்பனைக்கு அனுமதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு இன்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனின் ஆலோசனைக்கு அமைய, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து பொதுச்சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களின் ஆபத்தைக் கருத்தில் கொண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமையமாகாணத்தில் உள்ள அனைத்து சந்தைகளை மூடுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சந்தைவியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயன் தரும் வகையில் வீதியோரம் அல்லது நடமாடும் விற்பனையை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்பில்,



வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் கொரோனா நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை வடக்கு மாகாணத்தில் அனைத்துப் பொதுச் சந்தைகளையும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை மூடப்பட வேண்டும்.

வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு வியாபாரத்தைப் பரவலாக்கி வீதியோரங்களில் அல்லது தமது வதிவிடங்களில் அல்லது நடமாடும் விற்பனையில் ஈடுபட அனுமதியளிக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலர் வியாபாரம் செய்தலைத் தடை செய்யவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலையை விரைவில் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது -என்றுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலை: சுகாதார அமைச்சின் தகவலே உண்மை

## தொற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்கும் தமிழ் மக்களுக்கு அரசு நன்றி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவின் முதலாவது அலை தாக்கம் ஆரம்பம் முதல் இதுவரை அனைத்துத் தகவல்களும் சுகாதார அமைச்சாலேயே வெளியிடப்படுகின்றது. சுகாதார அமைச்சின் தகவல்களையே நாம் வெளியிடுகின்றோம். இது தான் நடைமுறை. சுகாதார அமைச்சின் தகவல்கள் அனைத்தும் உண்மை.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார நடைமுறைகளை வடபகுதி மக்கள் ஒழுக்கமாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடிக்கின்றார்கள். அதன் காரணமாக முப்படையினர் மற்றும் பொலிஸார் சுகாதாரப் பகுதியினரால் வடபகுதியில் இலகுவாகக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கூடியதாகவுள்ளது.

அத்தோடு தமிழ் மக்களுக்கு இந்தக் கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியதற்காக நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் நான் தமிழ் மக்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

# வட்டுக்கோட்டை உப்புவயல் குளம் மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

## இராணுவத் தளபதியால் திறந்து வைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ.17

புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை தென்மேற்கு உப்புவயல் குளம் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவால் இன்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில், தியாகி அறக்கொடை நிறுவனத்தினரின் நிதிப் பங்களிப்பில், இராணுவத்தினரால் இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அது இன்று பொது மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ். நண்பர்கள் அமைப்பு, வட்டுக்கோட்டை தென்மேற்கு விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அந்தக் குளத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ். இந்திய துணைத் தூதுவர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர், வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## மாகாண சபைத் தேர்தலில்

# தனியே களமிறங்கவேண்டும் தமிழ் முற்போக்குக் கூட்டணி!

## மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு இதுவே என்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

மாகாண சபைத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே பங்காளிக் கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அந்தத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே பங்காளிக் கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது பற்றி கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

மாகாண சபை முறைமை தொடர வேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை இரத்துச் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கிவிடும் – என்றார்.

# கொரோனாத் தொற்றுப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிறந்துள்ளன.

கொழும்பு – 10, குப்பியாவத்தையைச் சேர்ந்த 29 வயதுடைய பெண், பிரசவத்துக்காகச் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு டி சொய்சா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என வைத்தியர் சாகரி கிரிவண்டேனியா தெரிவித்தார்.

இந்தநிலையில், அவர் இன்று காலை சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் ஆண் குழந்தைகள் இருவர் மற்றும் பெண் குழந்தைகள் இருவரைப் பிரசவித்துள்ளார்.

தாயும் குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளனர் எனவும், அவர்கள் தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கொழும்பு டி சொய்சா வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாவின் பிடியிலிருந்து இதுவரை 26,353 பேர் மீண்டனர்!

## 8, 224 பேர் தொடர்ந்து சிகிச்சையில்

இலங்கையில் இதுவரை 34 ஆயிரத்து 737 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 701 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 224 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவால் இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் நினைவேந்தல் .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

“அப்படியானால் நீங்கள் நோக்கும் அரசியல் ‘ஒரு நாடு, ஒரு தேசம், ஒரு மக்கள்’ என்று தருவதை எடுத்துகொண்டு இருந்தால் இருங்கோ அல்லது எங்கென்றாலும் போங்கோ என்ற தீர்வா? என்று கேட்டேன்.

“ஐயோ. நீங்கள் இந்த வரலாறுகளை அந்த அந்தக் காலங்களின் பின்னணியில் பார்க்காது, காலங்களைத் தாண்டி வரவேண்டும். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடாதீர்கள்” என்று உரிமையுடன் கடிந்து கொண்டார்.

இந்த அரசியலை கொண்டு நடத்தத்தான் கால கட்டங்கள் அனுகூலமாக்கியிருக்கின்றன. அதையே தொடர்ந்தும் செய்கிறார்கள்.

**யார் தியாகி? யார் துரோகி?**
**துரோகி பட்டம் சூட்டும் விவேகி!**

**கேள்வி:-** போர்க்குற்றத்திற்குச் சூத்திரதாரியாக இருந்து, போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டி இருக்கும் ஒருவரை (சரத் பொன்சேகாவை) ஜனாதிபதியாக்குவதற்கு துணைசென்று, மக்களை வாக்களிக்கத் தூண்டி, அந்த வங்குரோத்து அரசியலின் தெளிவால் சரத் பொன்சேகா, மாவீரர் தின நினைவு காலத்தில் புரெவிப் புயல் வந்திருக்கலாம், அழிப்புகள் நியாயம் என்று சுயநலமாகக் கூறும் நிலைமை வந்திருக்கிறது. இத்தகைய சூழலில் நடப்பவையோடு தமிழ் மக்கள் நடைப்பயணம் செய்வதா?

**பதில்:-** அது மக்களின் கையிலும் அவர்கள் தேடும் தலைமையிலும் தங்கியிருக்கிறது. அவற்றையொட்டியே அவர்களின் தலைவிதியும் அமையும்.

24 மணிநேர அவகாசத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து எழுபத்தி நான்காயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களை ஒக்டோபர் 1990 இல் புலிகள் வெளியேற்றிய சம்பவத்திற்கு ஏதோ நியாயங்கள் காலத்துக்கு காலம் சொல்லப்பட்டபோதும், அதைக் கண்டித்து எழுந்து நின்று தட்டிக் கேட்க எங்களது மற்ற தலைவர்களுக்கோ மக்களுக்கோ திராணியிருக்க வில்லை. பார்வையாளராக இருந்தனர்.

இது நடந்து 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. 3 ஏப்ரல் 2002 இல் புதுக்குடியிருப்பில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம், அது தாங்கள் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறு என்றும், இந்தத் துன்பமான சம்பவம் நடந்தேறியிருக்கூடாது, அதற்கு நாங்கள் பகிரங்க மன்னிப்பு கோருகிறோம் என அறிவித்து, மேலும் அவர்களை மீளக் குடியேற்றுவது தங்கள் பொறுப்பு என்றும் ஏற்றுக் கொண்டார்.

ஆனால், இன்றுவரை, அன்று நிகழ்ந்த முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் தாக்கத்தை நிவர்த்தி செய்ய முடியவில்லை.

வெளியேறிய மக்கள், புத்தளத்தில் குடியேறி மறுபகுதிகளில் வாழ்ந்த சகோதரர்களின் தயவில் வாழ்ந்தனர். தங்களுக்கு நடந்த மனித உரிமை மீறல்களை அவர்களும் சர்வதேசத்துக்கு பதிந்தார்கள். இவை கணக்கெடுத்துக்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சி மட்டக்களப்பில் கருணாவினால் தொடரப்பட்டது. இவற்றின் விளைவாக யாழ்ப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்த ஜான்சிலா மஜீத் என்ற பெண்மணி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றிய சேவைகளுக்காக 2010 இல் தைரியம் மிகுந்த சர்வதேச பெண் என அமெரிக்காவில் கௌரவிக்கப்பட்டார். நாங்கள் எங்களது மனித உரிமைகளுக்காக மன்றாடும்போது, எங்களுக்கு எதிராக இவையும் பேசப்படும் என்பதை கணக்கில் எடுக்கவேண்டும்.

இன்னொரு சந்தர்ப்பத்தில், இந்தச் சம்பவத்தை உதாரணம் காண்பித்து, பிரபாகரனிடம், ஒரு பத்திரிகை நிருபர், அதுபோலவே உங்களால் செய்யப்பட்ட சகோதரப் போராளிகளின் கொலைகள் நியாயமானவைதானா? அல்லது அவையும் துன்பியல் சம்பவங்கள்தானா?” என்று கேட்டதற்கு அவர் “எதிரிக்கும் துரோகிக்கும் வித்தியாசமுண்டு. துரோகிக்கு மன்னிப்பே கிடையாது. இதற்கு மேல் அதனை மேற்கொண்டு தொடராதீர்கள்” - என்று முடித்து விட்டார்.

இவ்வித வரலாறுகளில் யார் தியாகி? யார் துரோகி? என்பது புரியாமலே இருக்கிறது. துரோகி என்ற பட்டத்தைச் சூட்டும் விவேகி யார்? என்றும் சொல்லப்படுவதில்லை.

ஆனால், அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும், ஒரு ஜீவனையும் அவர்களது குடும்பத்தினரின் எதிர்காலத்தையும் பொசுக்கியது என்பதும் அந்தக் குடும்பங்களை விடுதலைப் பாதையில் இருந்து அந்நியப்படுத்தியது என்பதும் நிச்சயம்.

இவற்றை இப்போது மறைப்போம், ஆனால் மறக்க வேண்டாம், விடுதலையின் பின்சரி பிழையை ஆராயலாம் என்ற பிரசாரங்களால் மக்கள் அவற்றைப் பற்றி மௌனம் காத்தனர்.

ஆக, மக்கள் தேர்தல் காலங்களில் வாக்குப் போடுவது மட்டுமல்லாமல், நாளுக்கு நாள் எடுக்கப்படும் தீர்மானங்களிலும் தங்கள் உறுதிப்பாட்டை தெரியப்படுத்தல் வேண்டும்.

**கேள்வி:-** வழிதான் என்ன? நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மற்றோரும் பிய்த்து உதறியதை பார்த்தீர்களா?

**பதில்:-** ஆம், நல்ல அருமையான நெற்றியடிப் பேச்சு. கிரிக்கெட்டில் சிக்ஸரும், பவுண்டரியும் அடித்த பொழுது நாங்கள் சிலாகித்த மாதிரி சிலாகித்தோம்.

இதே நாடாளுமன்றத்தில் பல ஆளுமையுள்ளவர்கள், சுந்தரலிங்கம், செல்வநாயகம் வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்று எத்தனையோ பேர் அவ்வாறு உரையாற்றியிருக்கிறார்கள். சிங்களவரிடத்தில் ஏதாவது வழியில் அவர்களின் உரைகள் நாணத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? அவர்கள் தங்களது காரியத்திலே கண்ணாயிருக்கிறார்கள்.

சில நாளைகளுக்கு முன்பு, மட்டக்களப்பு உறுப்பினர் சாணக்கியன் மூன்று மொழிகளில் அழகாக பேசியபோது, ஜனாதிபதி கோட்டாபய அவரை அழைத்து, நன்றாகப் பேசுகிறீர்கள். ஆனால், நாடாளுமன்றத்தில் பேசி என்ன சாதிக்க போகிறீர்கள்? நீங்கள் எங்களுடன்தான் கடைசியில் பேசவேண்டும் - என்று தங்கள் அதிகாரத்தின் யதார்த்தத்தை இடித்துரைத்தார். இப்படியான உறைக்கும் பேச்சுக்கள் தமிழ் சினிமாவில் எம். ஜி. ஆர் – வீரப்பாவுக்கு இடையில் நடக்கும் கத்திச்சண்டைகள் போன்று ஒரு பக்கத்திற்கு ஆதரவான உணர்ச்சியோடு பார்க்கலாம்.

ஆனால், அப்படியான சினிமா ரசிப்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால் விளையும் பயன் என்ன?

ஆக, எங்களது தலைவர்களின் அணுகுமுறைகள் தமிழ் மக்களை மையப்படுத்தி, சிங்கள ஏகாதிபத்தியதை எதிர்கொள்வதாக இருக்கவேண்டும். ஆனால், அவர்களோ, எப்படி தமிழர் தரப்பில் தங்களது எதிராளிகளை வீழ்த்துவது என்ற குறிக்கோளில்தான் செயல்படுகிறார்கள். எவ்வளவு பேச்சுவார்த்தைகள் நடந்தன, சமரசத் தீர்வுகள் தமிழர் தரப்பால், விட்டுக் கொடுத்துத் தரப்பட்டன? ஆனால், எதுவுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதில்லை. சிங்கள ஏகாதிபத்தியம், “ஒரு நாடு - ஒரு தேசம்” என்ற அடிப்படையிலிருந்து விட்டுக் கொடுப்பதில்லை என்று நிற்கிறது.

இதை அறிந்தும் தேவையான சர்வதேச ஆதரவுகளைத் தேடாமல், மேலும் முனைப்பெடுக்கும் புது அரசியல் யாப்புக்கு சமர்ப்பணம் செய்கிறார்கள். அந்தச் சமர்ப்பணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏதோ ஒரு புது யுகம் பிறந்துவிடும் என்பது போல அதில் நேரத்தை செலவிடுகிறார்கள்.

**இது எமது கருமம்**

**கேள்வி:-** எங்கள் நோக்கம் நழுவுகிறதா?

**பதில்:-** இதில் விசித்திரமென்னவென்றால், சம்பந்தனும் சுமந்திரனும் ஒரு குழுவினோடு சேர்ந்து சமர்ப்பணம். மாவை மற்றக் கூட்டு கட்சிகளோடு சேர்ந்து இன்னொரு சமர்ப்பணம். நீதியரசர் விக்கினேஸ்வரன் இன்னுமொரு குழுவை அமைத்து அவர்களுடன் சமர்ப்பணம்.

ஊடகங்களில் இவற்றுக்குள் எது நல்லது என்று வாசிப்பவனே திணறிப்போவான். அதுதான் எமது துர்ப்பாக்கியம். நான் அடிக்கடி ஒரு கதையை கருத்துக்கு வலுவூட்டச் சொல்வதுண்டு. அதைத் திரும்பவும் சொல்கிறேன்.

அர்ஜுனனுக்கு, சில போர் தந்திரங்களை இரகசியமாக பயிற்சியளிக்கிறார் என்று துரோணருக்கு எதிராக கௌரவர் பக்கத்திலிருந்து குற்றச்சாட்டுக்கள் இருந்தன. ஏன், பாண்டவர் பக்கத்திலும் அதுபற்றி புகைச்சல் இருந்தது. அதை துரோணர் மறுதலித்து, தொடர்ந்த குற்றச்சாட்டுகளால் அதனை நிரூபிக்க விழைந்தார். ஒரு நாள் கௌரவர், பாண்டவர் எல்லோரையும் பயிற்சிக்கு அழைத்துச் சென்றபோது ஆற்றங்கரையில் நின்ற மாமரத்தில் இருந்த பழத்தை தனக்கு வீழ்த்தித் தருமாறு கேட்டார். துரியோதனனோ இது என்ன, ஒரு சிறு சமாச்சரம், எனது தம்பி ஒருவனே அதனை ஒரு அம்பிலேயே வீழ்த்தித் தருவான் - என்று பெருமையடித்தான். துரோணரோ சரி, ஆனால் நான் ஒவ்வொருவரையும், அம்பு எய்ய நிறுத்திவிட்டு எல்லோரிடமும் ஒரே கேள்வியைக் கேட்பேன். யார் மாம்பழத்தை வீழ்த்துகிறானோ அவன்தான் வில்லில் விற்பன்னன், அவன் தான் படிப்பித்த தனிப்பட்ட உத்திகளால் அதை செய்தான் என்று நினைக்க வேண்டாம். - என்று அறிவித்துப் போட்டியை தொடங்கினார்.

இது என்ன பெரிய சாமர்த்தியம் என்று துரியோதனன் தனது தம்பிமாரை ஒவ்வொருவராக முதலில் அனுப்பித்தான் கடைசியாக அம்பெய்தினான். ஆனால், பழம் விழவில்லை. அதுபோலவே பாண்டவர் பக்கத்தில் ஒவ்வொருவராக வந்தனர். பழம் விழவில்லை. கடைசியாக அர்ஜுனன் நிலை கொண்டான். துரோணர் எல்லோரிடமும் கேட்ட அதே கேள்வியை கேட்டார்.

மரம் தெரிகிறதா? மாம்பழம் தொங்கும் கிளை தெரிகிறதா? கிளை தெரிகிறதா? கிளையிலுள்ள இலைகள் தெரிகின்றனவா? மாம்பழம் தெரிகிறதா? –

இவை எல்லாவற்றுக்கும் அர்ஜுனனின் பதில் இல்லை என்றே வந்தது.

மற்றவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு பதில் அல்லது மாம்பழமாவது தெரிகிறது என்று சொன்னார்கள்.

கௌரவர்களோ, அர்ஜுனனுக்குப் பழமோ அது இருக்கும் கிளையோ தெரியவில்லை, எப்படி வீழ்த்துவான் என்று கேலி செய்தனர். துரோணர் அம்பை எய்யச் சொல்ல மாங்கனி வீழ்ந்தது. எல்லோருக்கும் ஆச்சரியம்.

துரோணர் காரிய சித்திக்குக் கவனம் குறியில் இருக்க வேண்டுமேயொழிய குறியை விட்டு எல்லாவற்றிலுமே கவனம் திரும்பினால் காரியமாகாது, இங்கே உங்கள் குறி காம்பில் இருந்திருக்க வேண்டும். அதுதான் மாங்கனியை மரத்தின் கிளையில் இணைத்தது. அந்த காம்பு மட்டுமே தெரிந்தால் போதும். அதுதான் கர்ம வீரனுக்கும் மற்றவர்க்கும் வித்தியாசம்” - என்றார்.

எங்கள் தலைவர்களுக்கு எது காம்பு என்று நன்கு தெரியும். ஆனாலும் கிளையையும் குழையையும் கண்டு ஏமாந்து காம்பிற்கான குறியைவிட்டு, பழத்தைக் கோட்டை விடுகிறார்கள். எப்பொழுது அவர்கள் கர்ம வீரர்களாகிறார்களோ, அப்பொழுதுதான் நாம் விடியலைப் பார்க்கலாம்.

அதுவரை இது எமது கருமம்தான்.

# நாடுதிரும்பிய இலங்கையர் இருவருக்குக் கொரோனா!

கொழும்பு, டிசெ. 18

வியட்நாம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த இருவரும், சுற்றுலா ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டு வந்த நிலையில், கடந்த (புதன்கிழமை) அவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் பன்னிபிட்டி மற்றும் பெலவத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவர்கள் இருவரும் கடந்த 4 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில், தனிமைப்படுத்தலுக்காக சிலாபம் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று கிடைக்கப்பெற்ற நிலையிலேயே, தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காலியில் சில இடம் கட்டுப்பாடுகள்!

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமையால், காலியில் சில பகுதிகளுக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படுள்ளது.

காலி நகரசபைக்குட்பட்ட கடுகொட பிரதேசத்தின் சில பகுதிகளுக்கே இவ்வாறு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படுள்ளதாக அந்த மாவட்ட துறைமுக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுகொட பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 14 பேர் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்தே, அப்பகுதியில் மூன்று இடங்களில் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலி நகர சபைக்குட்பட்ட மேலும் 7 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் இவ்வாறு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணி வெற்றியை கேக் வெட்டிக் கொண்டாடிய இளைஞர்கள்!



லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு இருபது தொடரில் ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து யாழில் இளைஞர்கள் சிலர் கேக் வெட்டி தமது மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

லங்கா பிரீமியர் லீக் தொடர் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை இறுதிப் போட்டி நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் மற்றும் ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகள் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், பதிலுக்கு 189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காலி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இந்நிலையில் 53 ஓட்டங்களால் காலி அணி தோல்வியடைந்தது.

ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து யாழ்ப்பாண இளைஞர்கள் சிலர் ஒன்றிணைந்து நேற்றிரவு கேக் வெட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# முஸ்லிம் மக்களின் சடலங்களைக் கட்டாயத் தகனம் செய்வது பேரினவாத ஒடுக்கு முறையே தவிர சுகாதார நடைமுறை அல்ல!

## ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

கொரோனா நோய்த் தொற்றால் மரணம் அடைந்த முஸ்லிம் மக்களினது சடலங்களை அவர்களது மத நம்பிக்கைகளை உதாசீனம் செய்து கட்டாயத் தகனம் செய்வதும், நாட்டுக்கு வெளியே ஆளரவமற்ற தீவொன்றில் அவர்களது சடலங்களைப் புதைப்பது தொடர்பாக ஆராய்வதும் முஸ்லிம் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் பௌத்த, சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறையே தவிர சுகாதார நடைமுறை அல்ல என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

கொரோனா நோய்த் தொற்றால் இறந்த முஸ்லிம் மக்களின் சடலங்களைக் கட்டாய எரியூட்டும் இலங்கை அரசாங்கத்தின் நடைமுறை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் தாம் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த மக்களும் தாங்கள் கடைப்பிடிக்கும் மதநம்பிக்கைகளின் அடிப்படையிலேயே தங்களின் இறுதிக் கிரியைகள் செய்யப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பர். அந்த வகையில் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்ட இஸ்லாம் மார்க்கத்தை கடைப்பிடிக்கும் மக்கள் தங்களின் சடலங்கள் புதைக்கப்படுவதையே மரபாகக் கொண்டுள்ளனர். இஸ்லாம் மதத்தவர்கள் வால் எலும்பு என்று அழைக்கப்படும் முள்ளந்தண்டின் கடைசி எலும்பான குயிலலகு எலும்பில் இருந்தே உயிர்த்தெழல் நிகழ்வதாக நம்புகின்றனர். எரித்தால் வாலெலும்பு உடனடியாகவே சாம்பலாகி விடும் என்பதாலேயே அவர்கள் சடலத்தைப் புதைத்து வருகின்றனர்.

இந்து மதத்தவர்கள் மறு பிறப்பில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள். பௌத்தர்களும் மறு பிறப்பில் நம்பிக்கை வைத்துள்ளார்கள். கிறிஸ்தவர்கள் இறப்பின் பின்னர் நியாயத் தீர்ப்பின் அடிப்படையிலேயே சொர்க்கமும், நரகமும் தீர்மானிக்கப்படுவதாக நம்புகிறார்கள். உணர்வுபூர்வமான இந்நம்பிக்கைகளை எவரும் கேள்விக்கு உட்படுத்துவதில்லை பண்பாடு சார்ந்த இவ்விடயங்களை அறிவியல் ரீதியாக எவரும் ஆராய்வதில்லை. இவற்றைப் போன்றதே இஸ்லாமியர்களினது உயிர்த்தெழுதல் நம்பிக்கையுமாகும்.

முஸ்லிம் மக்களது சடலங்களை எரியூட்டுவதற்குச் சமூகத்தின் சகல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளபோதும் அரசாங்கம் தனது முடிவை மாற்றுவதாக



இல்லை. மாறாக, மாலைதீவில் மனிதக் குடியிருப்புகள் அற்ற தீவொன்றில் புதைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவும் பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் ஒரு வெளிப்பாடே ஆகும். இலங்கைக் குடிமக்களாகத் தங்களை உணரும் முஸ்லீம் மக்களை இலங்கைக்கு வெளியே அடக்கம் செய்வது என்பது அவர்களை இலங்கையில் வேரிழக்கச் செய்யும் முயற்சியின் ஒரு கட்டமே ஆகும்.

உலக சுகாதார நிறுவனம் கொரோனா நோய்த் தொற்றால் இறந்தவர்களின் சடலங்களைக் கையாள்வது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் புதைப்பதை தடைசெய்வதாகக் குறிப்பிடவில்லை. எரிப்பதோ புதைப்பதோ எதுவாயினும் மக்களின் நம்பிக்கைகள் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிட்டுள்ளது. ஆனால், இலங்கை அரசாங்கம் புதைத்தால் வைரஸுக்கள் நீரால் பரவலடையும் என்று அறிவியலுக்கு ஒவ்வாத காரணத்தைக் காட்டி முஸ்ல்ம்களின் சடல விவகாரத்தைக் கையாண்டு வருகிறது. கொரோனாவைச் சாட்டாக வைத்து முஸ்லிம் மக்கள் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த ஒடுக்குமுறையைக் உடனடியாகவே கைவிட்டு சடலங்களை அவர்களின் விருப்பப்படியே புதைப் பதற்கு ஆவன செய்யவேண்டும். –என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெள்ளவத்தையில் மற்றுமொரு பகுதி திடீரென முடக்கம்!

*கொழும்பு, டிசெ.18*

*கொழும்பு மாவட்டத்தின் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவின் கீழுள்ள நஷிர் தோட்டம் பகுதி நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரும் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.*

*குறித்த பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள பின்னணியிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.*

*கடந்த சில நாள்களாக குறித்த பகுதியிலிருந்து அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.*













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2020 இல் வெளியிடப்பெற்றது.